Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 24.

### ஜுலு 'கலகம்'

நான் ஜோஹன்ஸ்பர்க்கில் நிலையாக வசிக்க ஆரம்பித்துவிட்டதாக நினைத்த பின்னரும், எனக்கு நிலையான வாழ்க்கை ஏற்படவில்லை. நான் அமைதியான வாழ்க்கையை இனி நடத்தலாமென்று உணர்ந்த போது எதிர்பாராத சம்பவமொன்று நடைபெற்றது. நேட்டாலில் ஜுலு 'கலகம்' ஆரம்பமான விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைகள் பிரசுரிக்க ஆரம்பித்தன. ஜுலுக்களைப்பற்றி எனக்கொன்றும் தப்பபிப்பிராயம் கிடையாது. அவர்கள் இந்தியர்களைத் தொந்தரை செய்யவில்லை. ஆனால் 'கலக'த்தைப்பற்றி மட்டும் எனக்குச் சந்தேகம் அதிகமாக இருந்தது. அப்போது நான் பிரிட்டிஷ் ராஜ்யம் உலக நன்மைக்காகவே இருந்து வருகிறதென்று நம்பியிருந்தேன். எனவே என்னுடைய அப்போதைய ராஜ பக்தியானது பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு மாறாக எதையேனும் நினைக்கவும் முடியாதபடி என்னைத் தடுத்துவிட்டது. எனவே அந்தக் 'கலகம்' என்னுடைய அபிப்பிராயத்தை எவ்விதத்திலும் மாற்றவில்லை. நேட்டாலில் தொண்டர்கள் பாதுகாப்புப் படையொன்று இருந்தவர்களுடன் அதில் அதிகமான மனிதர்களும் சேர்ந்துவந்தனர். இப்படையானது அக் கலகத்தைச் சாந்தப்படுத்த அதி தீவிரமாக முயன்றதாகவும் நான் படித்தேன்.

நானும் நேட்டாலுடன் அதிக சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தபடியால், என்னையும் நேட்டால் வாசியாகவே நினைத்தேன். எனவே நான் அங்குள்ள கவர்னருக்கு ஒரு கடிதமெழுதி அதில் அவசியமாயின் நானும் ஒரு இந்திய வைத்திய உதவிப் படையைத் தயாரித்து உதவிசெய்யச் சித்தமாக இருப்பதாக எழுதினேன். உடனே அவர் அவ்வாறே செய்யும்படி பதில் எழுதினார். என் வேண்டுகோளை அவர் அவ்வளவு எளிதில் ஒப்புக் கொள்வாரென்று நான் எதிர்பார்த்திருக்கவில்லை. அதிஷ்ட வசமாக நான் கடிதம் எழுதுவதற்கு முன்னரே அத்தகைய படையொன்றை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தேன். என் வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டால் என் ஜோஹன்ஸ்பர்க் குடும்பத்தைப் பிரித்துவிடுவதென்றும் நிச்சயித்திருந்தேன். ஸ்ரீ. போலக் வேறு ஒரு சிறியவீட்டை அமர்த்திக் கொள்ளவேண்டியவரானார். ஸ்ரீமதி. காந்தி போனிக்ஸில் போய்த் தங்க நேரிட்டது. இந்த முடிவான அபிப்பிராயத்தை என் மனைவியும் ஆமோதித்தாள். இத்தகைய விஷயங்களில் என் அபிப்பிராயத்துக்கு மாறாக அவள் எப்போதேனும் நின்றதாக எனக்கு ஞாபகமில்லை. எனவே கவர்னரிடமிருந்து எனக்குப் பதில் கிடைத்ததும், நான் ஒரு மாத காலவரையறைக்குள் வீட்டைக் காலி செய்துவிடுவதாக வீட்டுச் சொந்தக்காரருக்கு அறிவித்துவிட்டேன். பின்னர், சில சாமான்களைப் போனிக்ஸுக்கு அனுப்பினேன். மற்றும் சிலவற்றை ஸ்ரீ. போலக்கினிடம் கொடுத்து வைத்தேன்.

உடனே நான் தர்பனுக்குச் சென்று எனது படையில் மனிதர்களைச் சேரும்படி கேட்டுக்கொண்டேன். எங்களுக்கு அதிகமான திரவிய சகாயம் வேண்டிய அவசியமிருக்கவில்லை. நாங்கள் இருபத்து நான்குபேர் ஒன்றாகச் சேர்ந்து கொண்டோம். அதில் நால்வர் குஜராத்தியர். ஒருவர் பாதான் வர்க்கத்தைச் சேர்ந்தவர். மற்றவர்கள் தென்னிந்தியாவினின்றும் குடியேறியவர்கள்.

எனக்கு ஒரு அந்தஸ்தைக் கொடுப்பதற்காகவும், வேலையைச் சௌகரியமாக நடத்திச் செல்வதற்காகவும், பிரதம வைத்திய அதிகாரி தற்காலிகமாக என்னைப்பிரதமசார்ஜண்ட்டாகவும், என்னால் தெரிந்தெடுக்கப்பட்ட மூவரை சார்ஜண்ட்டுகளாகவும், ஒருவரை சேனையில் சிறு உத்தியோகஸ்தராகவும் நியமித்தார். நாங்கள் சர்க்காரிடமிருந்து எங்கள் உடைகளையும் பெற்றுக்கொண்டோம். எங்களுடைய படை சுமார் ஆறுவார காலம் மிகச் சுறுசுறுப்புடன் வேலை செய்தது. 'கலகம்' நடந்த இடத்துக்குச் சென்றபோது 'கலகம்' என்று சொல்வதற்குரிய எவ்வித அறிகுறிகளையும் நான் அங்கே காணவில்லை. அவ்விடத்தில் எப்படிப்பட்ட எதிர்ப்பு முறைகளும் காணப்படவில்லை. அவ்வாறு 'கலகம்' என்று சொல்லக்கூடிய அமைதியின்மை ஏற்பட்டதற்குக் காரணம் யாதெனின், ஜுலுக்களுக்கு விதிக்கப்பட்ட புதிய வரியொன்றைச் செலுத்தவேண்டாமென்று ஒரு ஜுலு தலைவன் உபதேசித்ததும், அதனால் அவர்கள் அங்கே அவ்வரியை வசூலிக்கச் சென்ற ஒரு அதிகாரியை ஈட்டியால் குத்திக் கொன்றதுமேயாகும். அவ்விஷயம் எவ்வாறிருப்பினும் என் அனுதாபம் மட்டும் ஜுலுக்கள் பக்கமே இருந்தது. தலைமை ஸ்தானத்துக்கு நாங்கள் வந்து சேர்ந்ததும் எங்கள் முக்கிய வேலை காயமடைந்த ஜுலுக்களுக்குப் பராமரிப்பதே என்று அறிவிக்கப் பட்டபோது நான் மிகவும் சந்தோஷமடைந்தேன். அங்கேயிருந்த வைத்திய அதிகாரி எங்களை ஆவலுடன் வரவேற்றார். அவர், ஜுலுக்களின் காயங்களை ஆற்றுவதற்கு வெள்ளையர்கள் விரும்பவில்லையென்றும், அவர்களின் காயங்களெல்லாம் சீழ் கட்டிக்கொண்டிருக்கின்றனவென்றும் கூறினார். அவர் எங்களை அந்தப் பாமர ஜனங்களின் நன்மைக்காகவே கடவுளால் அனுப்பப்பட்டவர்களைப் போல் நினைத்து எங்களுக்கு வேண்டிய அவசியமான சாமான்களையெல்லாம் கொடுத்து ஆஸ்பத்திரிக்கும் அழைத்துச் சென்றார். ஜுலுக்களும் எங்களைக்கண்டு ஆனந்தமடைந்தனர். வெள்ளை சோல்ஜர்கள் இரும்புக் கம்பிகளின் வழியே எங்களைப் பார்த்து ஜுலுக்களின் காயங்களைக் கவனிப்பதினின்றும் எங்களை விலகச் செய்யவும் முயன்றனர். நாங்கள் அதைப் பொருட்படுத்தாமல் இருந்ததால் அவர்கள் அதிக கோபங்கொண்டு ஜுலுக்களை அபாரமாகத் திட்டவும் ஆரம்பித்தார்கள்.

மெதுவாக நான் அந்த சோல்ஜர்களுடன் நெருங்கிப் பழகியபோது அவர்கள் இவ்விஷயத்தில் தலையிடுவதை நிறுத்திவிட்டார்கள். என்னை 1896-ம் ஆண்டில் அதிகம் எதிர்த்தவர்களாகிய கர்னல்கள் ஸ்பார்க்ஸும், வைலீயுமே சேனைத் தலைவர்களாக இருந்தார்கள். அவர்களும் என் நிலைமையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு என்னை அழைத்து என் வேலையைப் பாராட்டினார்கள். அவர்கள் என்னை ஜெனரல் மெக்கன்ஜீ யிடம் அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தினார்கள். மேற்கூறியவர்களிருவரும் சோல்ஜர் வேலையையே செய்கிறவர்களென்று நேயர்கள் கருதிவிடக்கூடாது. கர்னல் வைலீ தர்பனில் பிரசித்திபெற்ற வக்கீலாக இருந்தார். கர்னல் ஸ்பார்க்ஸ் தர்பனிலுள்ள கசாப்புக்கடையொன்றுக்குச் சொந்தக்காரராயிருந்து எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்தவராயிருந்தார். கர்னல் மெக்ன்ஜீயோ நேட்டாலில் பிரசித்திபெற்ற நிலச்சுவான்தாராக இருந்தார். இந்தக் கனவான்களனைவரும் தொண்டர்களாகச் சேர்ந்து பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றிருந்தனர்.

எங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட காயமடைந்தவர்கள் போரில் காயப்பட்டவர்களல்லர். அவர்களுள் ஒரு கூட்டத்தார் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டவர்கள். அப்போது ஜெனரல் அவர்களைக் கசையடி அடிக்கும்படி உத்தரவிட்டதனால் அவர்களுக்கு அமிதமான ரணங்கள் உண்டாய் இருந்தன. மேலும் அந்த ரணங்களைக் கவனியாமலும் விட்டு விட்டபடியால் அவைகள் சீழ்கட்டிக் கொண்டு மிகுதியும் வாதையாக இருந்தன. மற்றவர்கள் ஜுலு நண்பர்களாகவே இருந்தார்கள். விரோதிகளினின்றும் அவர்களைப் பிரித்துக் காட்டுவதற்காகவே அவர்கள் பில்லைகளை அணிந்திருந்த போதிலும் சோல்ஜர்களால் தவறாக அடியுண்டு காயமுண்டவர்கள்.

இந்த வேலை மட்டுமல்லாமல் நான் வெள்ளை சோல்ஜர்களுக்கும் மருந்துகளைக் குறித்து, அவைகளைக்கலந்து கொடுக்கவேண்டிய வேலையையும் செய்யவேண்டியவனாக இருந்தேன். டாக்டர். பூத் என்பவரின் சிறிய ஆஸ்பத்திரியில் நான் பயிற்சி யடைந்திருந்தபடியால் அந்த வேலை எனக்கு மிக எளிதாகவே இருந்தது. மேலும் அவ்வேலை எனக்கு ஐரோப்பியர்களுடன் நெருங்கக் கூடிய சந்தர்ப்பத்தையும் அளித்தது.

நாங்கள் அடிக்கடி விரைவில் இடமாற்றம் செய்யவேண்டிய வேலையில் அமர்த்தப்பட்டோம். எங்கெங்கெல்லாம் அபாயம் ஏற்பட்டதாகச் செய்தி கிடைக்குமோ அங்கெல்லாம் உடனுக்குடன் போகவேண்டுமென்னும் கட்டளை எங்களுக்கிருந்தது. எங்கள் படையும் ஒரு குதிரைப் படையாகவே இருந்ததென்றே சொல்லலாம். நாங்கள் ஒரு குறிப்பிட்ட போர்க்களத்துக்குச் சென்றதும் எங்கள் தோளில் டோலிகளைத் தூக்கிக்கொண்டு நடந்தும் போக வேண்டியதாக இருந்தது. இரண்டு அல்லது மூன்று முறை நாங்கள் ஒரே நாளில் நாற்பது மைல் வரை நடந்துபோக வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் போன இடங்களிலெல்லாம் எங்களுக்கு இறைவனால் ஏற்படுத்தப்பட்ட நல்ல வேலைகளே காத்திருந்ததற்காக நான் சந்தோஷப்படுகிறேன். தவறாக அடியுண்ட ஜுலு நண்பர்களையே எங்கள் தோள் மீது தூக்கிச் சென்று அவர்களின் ரணங்களைக் கவனிக்கவேண்டிய வேலையே எங்களுக்கு அதிகமாக இருந்தது.

## தமாஷ் பேச்சு.

மனைவி—நாதா! எனக்கு நகையில்லையென எல்லோரும் கேலி செய்கின்றார்களே.

நா—என்னிடம் எத்தனை நகை (சிரிப்பு)கள் காட்டுகிறாய்! அவர்களிடமும் ஒன்று காட்டக்கூடாதா?

---

அர்ச்சகர்—பெரியவரே! இவ் விபூதியை உமது பேத்தியிடம் கொடும்.

பெரி—பேத்தியா? பெண்சாதி! பிள்ளை வரத்திற்கு வந்திருக்கின்றோம்.

அர்ச்—நல்ல சம்பந்தம்! பிள்ளை பணத்திற்கு வாங்கிக்கொள்ள வேண்டியதுதான்.

---

பெத்தண்ணே! வாரும். உமது மனைவி பிரசவிக்கும் தருணமாயிருக்கிறாள். ஆகவேண்டிய காரியத்தைப் பாரும்.

பெ—ஸ—இந்த நோத்திலா பிள்ளைப் பேறு? இன்னுமொரு மாதம் செல்லட்டும் என்று சொல்லி வையுங்கள்.

---

எஜமான்—பாலைக் காணோமே பாத்திரத்தில்!

வேலைக்காரன்— பூனை சாப்பிட்டு விட்டதோ!

எஜ—பக்கத்தில் வைத்திருந்த சீனியுங் காணோமே!

வே—வேலைக்காரப் பூனை! சீனி போட்டு பாலைச் சாப்பிட்டிருக்கிறது.

---

மனைவி— தாங்களில்லாமல் கண்ணுறக்கமில்லையே!

புருஷன்—தொட்டி யாட்ட வேறு ஆள் அகப்படவில்லையோ?

---

குரு—சிஷ்யா! பஞ்சாட்சரம் எடுத்துக்கொண்டு வா. பஞ்சாட்சரமென்றால் தெரியுமல்லவா?

சிஷ்—இதுவுமா தெரியாது? தலையணைதானே!

---

கேலிப் பேரன்— பாட்டி! உன் வாயேன் ஆட்டங் கொடுக்கிறது?

பாட்டி—வயது சென்று விட்டாலிப்படித்தான்.

கே—பே— அப்படியா! நான் கடலை தின்பதைக் கண்டோவென நினைத்தேன்.

---

## ஆராய்ச்சிக் கோவை.

மனிதனுடைய இருதயம் 8 அவுன்விலிருந்து 12 அவுன்ஸ் வரை நிறையுள்ளதாம்.

* *

ஜப்பான் தேசத்தில் 10 வருட காலத்தில் 1700 முறை பூகம்பங்கள் உண்டாயிருக்கின்றனவாம்.

* *

சென்னை நகரத்தில் மொத்தம் 2366 வீதிகள் இருக்கின்றன. ஜனத் தொகை 530,000.

* *

மனிதனுடைய தலையில் சராசரி 129000 முதல் 150,000 வரையில் உரோமங்களிருக்கின்றனவாம்.

* *

ஒரு அங்குலம் மழை பெய்ததென்றால், ஒரு ஏக்கர் நிலத்தில் 101 டன் மழை பெய்ததென அர்த்தமாம்.

* *

1 மணிக்கு 815 மைல் பறக்கும் ஒரு வித ஈ இருக்கின்றதாம். இதைச் சுடுகிறதற்கு பிராணி நூல் ஆராய்ச்சியாளர் நயமான மணலடங்கிய குண்டுகள் உபயோகிக்கிறார்களாம்.

* *

பர்லினில் ரேடியோ கோபுரம் ஒன்று பாரிஸ் எப்பெல் கோபுரத்தைப் பார்க்கிலும் 2 மடங்கில் கட்டப்போகிறார்களாம். அதன் உயரத்தில் வைக்கப் போகும் வெளிச்சம் 100 மைல் தெரியுமாம்.

* *

ஜெர்மனியைச் சேர்ந்த வெஸ்ட்டர்லாண்டு என்னுமிடத்தில் சமுத்திரத்தை மின்சார சக்தி கொண்டு வெப்பமாக்கி, வருஷ முழுதும் சமுத்திர ஸ்நானம் செய்யச் சாத்தியமாக்கப் போகிறார்களாம்.

* *

சீனாவிலும், ஜப்பானிலும் ஓர்வகை மரத்தினின்றும் கர்ப்பூரம் உற்பத்தியாகிறதாம்.

* *

லண்டன் சாக்கடைகள் 500 மைல்' நீளமாம்.

* *

புலிகளும், சிங்கங்களும் தூரையீரற் பலம் குறைவு படைத்திருப்பதால் அரை மைல் தூரத்திற்கு மேல் ஓட முடியாதாம்.

* *

இங்கிலாந்தில் நாவல்கள் எழுதிய பழைய காலத்து ஆசிரியர்களின் நாவல்கள் எழுதிய வருமானம் அடியிற்கண்டவாறாகும்:—ஸர். வால்டர் ஸ்காட்டுக்கு 2 வருடத்தில் 26000 பவுன். லார்டு லிட்டனுக்கு மொத்தம் 800,00 பவுன். டிக்கன்ஸுக்கு 'நிக்காலஸ் நிக்கல்பி' என்னும் புத்தகம் பிரசுரமாகியபோது வருடத்தில் 10,000 பவுன். ஜார்ஜ் எலியட் 'ரோமோலா' நாவல் மூலம் 10,000 பவுன்.

* *

மீன்களில் 19,000 வகைகள் இதுவரை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

* *

எல்லா சமுத்திரங்களினுடையவும் மொத்த ஜலம் 30 கோடி கன மைல் அளவுள்ளதாம்.

---

## தேவை.

கோயில்பட்டி தாலுகா குளத்தூர் நாடார் இந்து எலிமெண்டரி பாடசாலைக்கு எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை கொடுத்து ட்ரெயினிங் பரீக்ஷையில் தேறிய ஒரு உபாத்தியாயர் தேவை. அனுபோகத்தையும் ஆற்றலையும் கவனித்து சம்பளம் நிர்ணயிக்கப்படும். சர்டிபிக்கேட்டுகளுடன் மானேஜர் ஸ்ரீமான் வெற்றிவேல்நாடாருக்கு அப்ளிக்கேஷன் செய்து கொள்ளவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# சில தமிழ் மொழிகளின் திரிபும் பொருளும்.

## ஓர் மறுப்பு.

22—10—27-ல் வெளியான "தமிழ்நாடு" தினசரியின் 8-வது பக்கத்தில் சில தமிழ் மொழிகளின் திரிபும் பொருளும் என்னும் தலைப் பெயரிட்டு திரு. எம். கலியாணசுந்தர முதலியார் என்பாரோர் கட்டுரை எழுதியிருக்கிறார். அக்கட்டுரையானது நாடார் வகுப்பார் பூர்வ காலந் தொட்டே "கள் இறக்கும் தொழிலையுடையவர்" என்னும் தவறுதலான கருத்துடன் வரையப்பட்டிருப்பதால் அதனைப் படிக்கும் வாசகர்கள் நாடார்களைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்கு இம் மறுப்பு சாதகமாயிருக்குமென்ற கருத்துடன் எழுதப்பட்டிருக்கின்றது.

"சான்றோர்—சான்றார். இப்பெயர் சாணர்" என வழங்கி வருகிற தென முதலியார் கூறுகிறார். இது உண்மையே.

"சான்று-சாக்ஷி, நேரில் பார்த்தவன், ஒரு வழக்கில் சாக்ஷி சொல்லுவது, கண்டதைக் கண்டவனே சொல்வது".

"பார்ப்பது கீழிருந்தும் மேலிருந்தும் ஆகும்........."

"மரமேறி உயரத்திலிருந்தால், பிறர் ஒருவருமில்லை யென்று நினைத்துக் கீழாகச் செய்யும் காரியங்களைக் காண வேதுவாகும்; நன்றாய் அறிவான். நேரில் பார்த்தவன் சாக்ஷியாகிய சான்றோன் ஆவான்".

மேற்கண்ட வாக்கியங்கள் முதலியார் கட்டுரையின் முக்கிய பாகங்கள். முதலியார் கருத்துப்படி பார்த்தால் தென்னிந்தியாவில் சாக்ஷி சொல்வதற்காக ஒரு வகுப்பார் ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்விதம் தென்னிந்திய சரித்திரங்களிலாவது, அல்லது புராணங்களிலாவது, ஒரு வகுப்பார் இருந்ததாகக் காணப்படவில்லை. அவ்விதம் காணப்படின் முதலியார் கருத்து ஏற்றுக் கொள்ள வேண்டியது தானே? என்று யோசனை செய்ய வேண்டியதே. ஒற்றூடல் என்னுந் தொழிலிலிருந்தார்களென்று கூறுவராயின், கள் சம்பந்தம் ஏற்றுக்கு? தென்னை மரத்தைப் பார்க்கினும் எவ்வளவோ உயரத்துடன் நிமிர்ந்து நிற்கும் மாட மாளிகைகளென்ன, கோபுரங்களென்ன இவைகளெல்லாம் கீழ் நடப்பவைகளைப் பார்ப்பதற்குச் சாதகங்களாகாவோ?

தென்னைமரத்தை முதலியார் தேடிப் பிடித்ததின் காரணந்தானென்ன? தென்னை விசேஷமாய்த் தோப்புகளாகவே யிருப்பதால், தோப்புக்குள் நடப்பதை மாத்திரம் பார்க்க முடியுமே தவிர கண்ணுக் கெட்டிய தூரம் எவ்விதம் பார்ப்பது? மேலும் களவு முதலியன செய்வார் வீடு நுழைந்து செய்யும் போது தென்னை மரத்திலிருந்து பார்க்க முடியுமா? வீதிகளில் நடப்பதைப் பார்ப்பதற்கெனின் வீதிகள் தோறும் தென்னை மரங்களுண்டா? இல்லை யெனின், எங்கிருந்து பார்த்து சாக்ஷி சொல்வினர்? இவைகளுக்கெல்லாம் முதலியார் சமாதானஞ் சொல்லாத காரணந்தான் நமக்கு விளங்கவில்லை. சாற்றை விடுத்து சக்கையை வைத்துக் கொள்ளும் பண்ணடை போன்று, முதலியார் கருத்தும் மாட மாளிகைகள் கோபுரங்களை எல்லாம் விடுத்து தென்னை மரத்திற் சென்றது போலும்.

"கீழிருப்போருக்குத் தெரியாமல் செய்வதையும், கீழே (பூமியில்—தரையில்) கூட ஒருவருமில்லை யென்றிருந்து திருடினாலும் திருட்டுத்தனமாக எது செய்தாலும் எல்லாவற்றையும் மேலேயிருப்பவன் அறிவான். மேலே யிருப்போர் மரமேறியும், சூரியனும், சூரியனைப்போன்ற விளக்க அறிவினையுடைய அறிஞரும் ஆக மூவராகும். ..............3. நூல உடலால் மரமேறி உயரவிருந்து பார்ப்பதால் மூன்றுவதாகும்."

சாக்ஷி சொல்வோர் கண்ணிற் கண்டதைச் சொல்ல வேண்டியதே யன்றி அனுமானங்களால் கூறுதல் பயனில்லாய் முடியும். இங்கு அறிஞர் எப்படி சாக்ஷியாவர்? அறிஞர் இருதரப்பாரின் வாக்கு மூலங்களையும், சாக்ஷியங்களையும் ஆராய்ச்சி செய்து தமது நுண்ணறிவால் உண்மை காண்டல் இயல்பு.

இவர் சூக்கும அறிவால் "உயர்ந்தவர்" என உரைத்திருக்கின்றார் எனின், "சான்றோர் மிக்கோர்" எனுஞ் சூத்திரமே சாலும். இத்தனை சுற்று வேண்டியதில்லை. மூன்று சான்றோர் வேண்டுமெனின் நேர் வழியில் சென்று காணலே முறையாகும்.

நேர் வழியில் சென்றால் சிவ சாக்ஷியாகிய ஈஸ்வரனும், லோக சாக்ஷியாகிய சூரியனும், நாட்டின் சாக்ஷியாகிய அரசனும் ஆக மூன்று பேர்களும் தோன்றும்.

"ஜீவ சாக்ஷி மாத்திரமாய் நிற்கும்" என்று கைவல்ய நவநீதம் ஈஸ்வரனையும், "வைகர்த்தன், விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், இரவி யுலோகப் பிரகாசனு லோக சாக்ஷி" என்று திவாகரம் 12-வது தொகுதி சூரியனையும், "சான்று—உதாரணம், சாக்ஷி (தானே நடந்து காட்டுகையில் உதாரணம்)" என்று தமிழ் பேரகராதி, சான்றுர்ஆர்—சான்றார் என்று அரசனையும் குறிப்பதைக் காணலாம். இங்கு அரசனெவ்வழி அவ்வழி குடிகளும் என்னும் பழமொழியையும் கவனித்தல் வேண்டும்.

குடிகளின் குணமும், ஒழுக்கமும் அரசனின் குணத்தையும், ஒழுக்கத்தையுமே ஆதாரவாய்க் கொண்டிருக்கு மென்பதை இன்னும் நமதனுபவத்தில் காண்கிறோமன்றோ? ஆகையால் அரசனும் சாக்ஷியே (உதாரணமே) யாவான்.

இனி சான்றார் என்னும் பெயர் சாக்ஷி காரணமாக வந்ததா? அல்லது குலப் பெயரா? எனின், சான்றார் என்பது குலப் பெயராகவே கொள்ளல் வேண்டும். சூரியனுக்குரிய சாக்ஷி என்னும் பெயர் அவன் வழித் தோன்றல்களாகிய அரசர்களுக்கும் உரிமையுடையதே. "சான்றோர் மாது" "சான்றோர் மெய் மறை" "பல் சான்றீரே, பல் சான்றீரே" என்னும் வாக்கியங்கள் அரச குலத்தவரைக் குறிப்பிட்டமையாலும், சான்றோர் குலத்தவராகிய ஏனாதிநாத நாயனாரை உபமன்யு பக்த விலாசம், ஏனாதிநாதர் சரிதம் 3-வது ஸ்லோகத்தில் "சாக்ஷி குலோத்பவ" என்று கூறி யிருக்கின்றமையாலும் சூரிய வம்சத்தவர்களாகிய அரசர்களையே சான்றோர் என்னும் பெயர் குறிப்பிடு மென்க.

நிற்க, சான்றார் குலத்தவர்க் குரிய பூர்வத் தொழில் கள்ளிறக்குவதா அல்லவா? என்பதும் கவனிக்கத் தகுந்தது.

சாஸ்திரங்கள் தமிழிலிருந்து சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்து பின் தமிழ் நூல்களை அழித் தொழித்து, சேர்ப்பன சேர்த்து, பின் தமிழில் எழுதப்பட்டன வென்றுஒரு சாராரும், சமஸ்கிருதத்திலிருந்தே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன வென்று இன்னொரு சாராரும் கூறினும் சான்றோர்க்குரிய தொழில் கள்ளிறக்குவதில்லை யென்பது இரு பாஷா நூல்களிலும் கூறி யிருப்பதோடு சான்றோர்களுக்குரிய தொழில்களையும் தெளிவு படுத்திக் கூறியிருத்தலைக் காணலாம்.

ஏனாதிநாதர் சரிதம் 30-வது சுலோகம்.

"அஸ்மின்னேனாதி நாதாக்ய
ஆசீத் சாக்ஷி குலோத்பவ:
நிருபஸ் ஸஸ்த்ர கலா சார்யஸ்
ஷிவ பக்தாங் க்ரீஸக்ததி"

(பொ—ரை) "அந்தக் கிராமத்தில் சூரியனது குலத்தில் பிறந்தவரும், அரசரும், ஆயுத வித்தைக்கு குருஸ்தானம் கொண்டவரும், சிவனடியார்களது பாதத்தைத் துதிப்பவருமாகிய ஏனாதிநாத நாயனார் என்பவர் ஒருவரிருந்தார்" என்பதாம். இச்சுலோகத்தில் நிருப என்பதையும், ஸஸ்த்ர கலாச்சார்ய என்பதையும் கவனிக்க வேண்டும்.

ஷை சரிதம் 6-வது சுலோகத்தில்,

"குலக்கர்ம சமுத்பக்ர வ்ருத்தி
ஹாங்யா யுதஸ்ரமே
ஏனாதி நாதமா சார்யந்
நஸேஹே பௌரு ஷேனஸ்"

(பொ—ரை) ஏனாதி நாத நாயனார் குலத்தவர்கள் எல்லோருக்கும் வம்ஸத் தொழிலாக ஏற்பட்டிருக்கும் தொழிற்றுறையில் உள்ளவனாகிய அதிசூரனென்பவன் மற்றவர்களுக்கு ஆயுத வித்தை கற்பிக்குந் தொழிலில் குருஸ்தானம் கொண்டவராகிய ஏனாதி நாத நாயனாரை எப்பொழுதும் பொறாமை கொண்டு விரோதித்து வந்தான் என்பதாம். இச் சுலோகத்தில் "குலக் கர்மம்" எனக் கூறுவதையும் கவனிக்க வேண்டும்.

பெரிய புராணம் ஏனாதி நாதர் சரித்திரத்தில் 5-வது செய்யுளில்,

"தன்னாத தங்கள் தொழிலுரிமைத்
தாயத்தின் உன்னானதி சூரன்"

3-வது செய்யுளில், "மன்னர்க்கு வெற்றி வாட்படை பயிற்றுந் தன்மைத் தொழில் விஞ்சையிற் றலைமை சார்ந்துள்ளார்".

13-வது செய்யுளில் "நந்தமது வாட் பயிற்று.........."தங்கள் குலத் தாயத்தின் ஆனாத செய் தொழிலாமா சிரித் தன்மை" 12-வது செய்யுளில் "மறப் படை வாட் சுற்றத்தார்" என்னும் பதப்பிரயோகங்களும் எமது கொள்கையை உறுதிப்படுத்தும்.

படை பயிற்றல் அரச அறு தொழில்களில் ஒன்றுதலாலும் ஏனாதி நாதர் முதலிய நாயன்மார்கள் காலத்திலும் வருணாச்சிரம தருமம் எனும் ராக்ஷஸப் பேய் எல்லோரையும் பிடித்திருந்ததாலும் திருநாளைப் போவாரென்னும் மஹா பக்த சிரோமணியும் ஞானியுமாகிய நந்தனாரை சிதம்பரம் தீக்ஷிதர்கள் அக்கினி முழுகச் செய்தார்களென்பதை பெரிய புராணம் கூறுவதாலும் வர்ண தர்மப்படியே சான்றோர் குலத்தவராகிய ஏனாதி நாதரும் படை பயிற்றும் தொழிலை மேற்கொண்டிருந்தாரென்பது அங்கை நெல்லிக் கனி போல் விளங்கும்.

சான்றார்—சாணார் என மருவியதற்குச் சில உதாரணங்களைக் காட்டிய முதலியார் "இவர் கள்ளுண்பதேயில்லை. இக்காரணத்தால் இவர்க்கு நாடார் என்ற பெயர் வந்தது. எதை நாடார் என்ற கேள்விக்குக் கள்ளைத் தான் நாடார் என விடை யளிக்க. தொழில் என்றது பிறர் பொருட்டு பயன் கருதி கூலி பெறச் செய்தல்; இவர் தொழில் தம் பொருட்டே யல்ல; தாம் அருந்துவதற்கே யல்ல; பிறர் அருந்துவதற்காகவே இவர் தொழிற் செய்வது" எனக் கூறுகின்றார்.

நமது முதலியார் நாடார் என்னும் பெயர் கள்ளை நாடாததால் ஏற்பட்டதல்ல வென்பதை உணராதது ஆச்சரியமாயிருக்கிறது. முதலியாரின் தமிழறிவும், சரித்திர அறிவும் ஒன்றுக்கொன்று முரணியிருக்கவேண்டும்; அல்லதுநாடார் மஹாஜனங்களின் உண்மையான சரித்திரம் தெரியாமலிருக்க வேண்டும். கள்ளை நாடாததற்காக நாடார் எனப் பட்டதாயின் கள்ளை நாடி யருந்து வோர்க்கு நாடுவோர் என்றிருக்க வேண்டுமல்லவோ?

பூசுரர் எனப்பட்டவர் யாகஞ் செய்து மதுவருந்தினர் என்பது சாஸ்திரம். தினசரி யாகஞ்செய்ததாகச் சரித்திர ஆதாரமுண்டா? இல்லை யெனின், யாகமில்லாமலே தினசரி மது வருந்துஞ் சிலர் இன்னு மிருக்கிறார்கள்.

அன்னா செல்வாக்கு தென்னாட்டில் மிகுந்திருந்த காலத்தே நாடாரைக்கள்ளிறக்கும்படி வற்புறுத்தப்பட்டதென்பதும், அவ்வழியில் ஒரு சிலர் தன் பத்துக்காற்றுத சென்றன ரென்பதும், அவரில் நூற்றுக்கு எழுபேருக்கு மேலில்லை யென்பதும், அத்தொழிலையும் நாடார்களின் நன்முயற்சியால் மாற்றி பெரும்பாலும் பதனீராக உற்பத்திசெய்யப் பெற்று ஜன நன்மைக் கேற்ற விதமாய் உபயோகத்துக்குக் கொண்டுவந்து விட்டார்களென்பதையும், பிறர் துன்பத்தை எதிர்த்து நின்று ஜெய மடைந்தோர் இன்னும் நிலைமைக்காரர் எனப் பேர் பெற்று நாட்டுக்கதிபதிகளாகவும், பெரிய மிராசுதார்களாகவும், வியாபாரிகளாவு மிருக்கிறார்களென்பதையும் அறியாமல் "இச் சான்றோர்வகையில் சிலர் இக் கள்ளிறக்குந் தொழில் பிறர் பலருக்குங் கேடுவிளைப்பதை யறிந்து இத்தொழிலை விட்டு வேறு தொழிலில் அமர்ந்து வருகிறார்கள். பலர் நிலச்சுவான் தார்களாயும், உத்தியோகஸ்தர்களாயும், வணிகர்களாயும், தனிகர்களாயும் இருக்கிறார்கள்" என்று கூறுகிறார்.

நாடார் என்னும் பெயர்பூர்வத்தில் நாடாண்ட அரசகுலத்தவர்களுக்கு நாடு அடியாகப் பிறந்த பட்டப் பெயரென்பதை தமிழ் நூல்களில் பரக்கக் காணலாம்.

நாடான்—நாடன்—நாடான்வான் என்பன நாட்டியாகப்பிறந்த பெயர்ச் சொற்களாகும்.

"நாடறிய நாடார் சபை யகத்தே" என்னும் பெருந் தேவனார் பாரதச் செய்யுளும், "வானழயின் கரும்பின் சாற்றின் வளர்ந்திடும் வையை நாடன்" என அருணசல புராண செய்யுளின் ஈற்றடியும், "ஞால நின்வழி யொழுகப் பாடல் சான்று நாடுடன் விளங்கு நாடா" என பதிற்றுப் பத்து மூன்றாம்பத்து 24-வது அகவலும், இன்னும் களவெண்பா, நாலடியார் முதலிய நூல்களும் கூறுகிற்கும்.

வையை நாடன், பொன்னி நாடான் முதலிய பல பதப்பிரயோகங்களையும் கவனிக்கின், நாடார் என்னும் பெயர் பூர்வம் நாடாண்ட அரசவகுப்பினருக்குரிய பட்டப் பெயரென்பது தெற்றென விளங்கும்.

சரித்திரவாயிலாயும், வழக்கங்களைக் கொண்டும் நாடார் என்பவர் நாடுடையவர் என்பதும், இன்னும் நாடுடையவர்களாகவே இருக்கிறார்களென்பதையும் கீழ்வருவனவற்றால் அறியலாம்.

"ஆதிகாலத்தில் திருநெல்வேலிப் பிரதேசம் பெரியபாண்டிய ராஜ்ஜியத்தின் ஓர் பாக மாயிருந்தது. அந்த ராஜ்ஜியத்திற்கு பிரதான நகரம் மதுரை எனப்படும். அது நாடுகளென்று சொல்லப்படும் பல சிறு ராஜ்யங்களாகப் பிரித்து அரச குலத்தவர்களால் ஆண்டுவரப்பட்டன. அவர்களர சாட்சி தன்னிஷ்ட ஏகாதி பத்தியமாயிருந்தது. அவர்களெல்லோரும் ஒருவருக்கொருவர் உட்படாமல் பிரத்தியேகமான சுவாதீன அரசராயிருந்தது மன்றி புத்திரபவுத்திர பாரம்பரையாய் பட்டம் அடைந்தும் வந்தனர்" என்று தாமஸ் டர்ன்புல் துரை 1823-ம் வருஷத்தில் எழுதியிருக்கின்றார்.

"நாட்டுக்கரசனை நாடான் எனப்படும்" என இந்திய ஜனக்கணிதப் புத்தகத்தில் கூறியிருக்கிறது. "நாட்டையாண்ட பிரதிநிதியை நாடான் என்று அழைத்தனர். நாடான் என்னும் பெயர் அவர்களிடம் ஒப்புவித்த நாடுவிலிருந்து பிறந்தது." என செங்கல்பட்டு மானியூலில் கூறியிருக்கிறது. நாடான் என்பது நம்முடைய கிறிஸ்தவர் களுக்குள் சாதாரண வழக்கத்திலுள்ள பட்டப் பெயராயிருக்கின்றது. அதற்குப் பொருள் பூமியையுடையவன்; அல்லது நிலைமைக்காரன் எனப்படும். நாடான் என்னும் பட்டப்பெயரை பூர்வத்தில் நாட்டையுடைய அரசர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. தற்காலம் அந்த நாடானே விவசாயியாகவும், வர்த்தகனாகவும், இன்னும் பல தொழிலாளியாகவும் இருக்கிறான்" என ஆர்தர் மர்காஷியல் துரைகூறி யிருக்கின்றார்.

"இன்னொரு நாடுரிமைக்கார வகுப்பைக் கவனிப்போம்".

"நாடார்கள் (கொற்கைக்கு) அருகாமையிலுள்ள எல்லா நிலங்களுக்கும் சுதந்திரம் உடையவர்களாயிருந்தார்கள். அந்த நாடார்களை இப்பொழுதும் பூமிக்குரிய அரச சந்ததியார்களெனப் பகிரங்கப்படுத்த அந்த நாடார்கள் விற்ற நிலத்தின் பேரிலும் சிலயுக்தமான ஆதி பத்தியத்தை, அதாவது அதிகாரத்தை உடைத்தாயிருக்கிறார்கள்.

சாதாரணமாக அவர்களது எல்லைக்குட்பட்ட எல்லா வீடுகளுக்கும் யுக்தமான சிறிய கட்டணத்தையும் வாங்கி வருகிறார்கள். மற்றவர்களும் இவ்விதம் கொடுத்து (அவர்களுக்கு) கீழ்படிந்து பூர்வீக வழக்கை யனுசரித்து நடந்து வருகின்றார்கள் என சந்தேகமில்லாமல் சொல்லலாம்" என் பிஷப் கால்டு வெல் துரை தாமியற்றிய "ரெமினிஸென்ஸ்" என்னும் புத்தகத்தில் கூறியிருக்கின்றார். இது போன்று இன்னும் பல ஆதாரங்கள் உண்டு.

முதலியாருக்கும் விருப்ப மிருந்து "தமிழ்நாடு" பத்திரிகையும் இடங் கொடுத்தால் தெளிவாய் எடுத்துக்

(இதன் தொடர்பு 6-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி தலைப்பிரிப்பைப் பந்தமுத்தி
அ' வருவத் தன்மை நாம

செதுமீன்றியேபொட்டு செவ்விட
த்துப் பிரிவற நின்றியக்கந் தெய்யுஞ்

சோசிமை மாத்தா வெளிமைன்தவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பமோர் போதளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

# நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு கார்த்திகை மீ ௬ உ

---

## மாயக் கப்பல்.

1919ம் ஞு மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தச் சட்டப்படி இந்தியாவுக்குக் கொடுத்த அரசியலைப் பரிசீலனை பண்ணும் பொருட்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நியமனம் செய்திருக்கிற ராயல் கமிஷனைத்தான் மாயக் கப்பலென்று வழுத்துகின்றோம்.

இக்கப்பலின் காப்டன் ஸர். ஜான்சைமன் அவர்களாம். அவர் ஒரு விபாலாம். வெகு தயாள சம்பன்னராம். கப்பலை (கமிஷனை) வெகு நிதானமாய் நடத்துவாராம். இக்கப்பலில் இந்தியருக்கு வேண்டியமுதற்றமான சாக்குகளெல்லாம் ஏற்றி வருகின்றன; அவற்றை அந்நியர் சாக்குகளென்று யாரும்பகிஷ்கரித்துவிடாமல் நிதானமாய்ப் பார்த்து ஏற்றுக் கொள்ளுங்களென்று வைஸிராய் இர்வின்பிரபு அவர்களும், மற்ற மாகாணக் கவர்னர்களும் இந்தியத் தலைவர்களையெல்லாம் அழைத்து ரகஸ்ய அறைகளில் வைத்து உபதேசம் செய்து அனுப்பி யிருக்கிறார்கள். இதுவரையும் அவர்கள் செய்த உபதேசமென்ன வென்றும், அதற்கு யார் யார் என்ன என்ன பதில் சொன்னார்களென்பதும் இன்னும் வெளி வர வில்லை. ஆனால் ரகஸ்ய அறைக்குள் புகுந்தவர்களெல்லாம் ராயல் கமிஷனென்னும் மாயக் கப்பலை வரவேற்கக் கூடாது; ஒரு முகமாய்ப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றே உறுதியாய் வெளியிட்டு விட்டார்கள். புதிய அரசியல் தூண்களாய் நின்ற மிதவாத சிகாமணிகளும் பகிஷ்காரத்துக் குடன்பட்டிருக்கிறது மிகவும் ஆச்சரியந்தான்.

அரசாங்கத்தார் எந்தப் படைப்பிலும் மிதவாதிகளுக்கு ஒரு இலை போட்டு வைப்பது வழக்கம். இக் கமிஷன் சுத்த வெள்ளையாயிருப்பதினாலே அவர்கள் கண்ணும் கூச்சப்படுகிறது போலும். ஆனால் மற்றத் தலைவர்களெல்லாம் ராயல் கமிஷன் நியமனமும், விசாரணை விசித்திரப் போக்கும், இந்தியருக்குத் தனிக் கமிட்டியில் பிணம் தூக்கும்வேலை கிடைத்திருப்பதும், லார்டு இர்வின் பசப்பு வார்த்தையும் கொஞ்சமும் பொருத்தமில்லையென்று ஒரே மனதாய்க் கூறுகிறார்கள்.

ஆனால் கீர்த்திவாய்ந்த பெருந்தலைவர்கள் மனப் போக்கும், முஸ்லீம்கள் மனப் போக்கும் இன்னும் சரியான தொனியுடன் வெளி வர வில்லை. சென்னையைப் பொறுத்த மட்டிலும் பிராமணக் காங்கிரஸ் வாதிகள் பகிஷ்கரிக்கு முந்தி நிற்கிறார்கள். திரு. சத்தியமூர்த்தியும் சட்டசபையிலும் சண்டை போடுவோ மென்கிறார். திரு. ஸ்ரீநிவாசய்யங்கார் மகாவேலைகள் செய்ய வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால் இவர்கள் ஆட்டும் பொம்மை மந்திரியாகிய டாக்டர். சுப்பாராயன் மட்டும் கமிஷனை வர வேற்க வேண்டுமென்கிறார். அவர் கட்சியைச் சேர்ந்த இரண்டு ஐயர்கள் அவர் பேச்சை ஆட்சேபிக்கிறார்கள். இந்த விடத்தில் தான் மாயக் கப்பலில் ஏதேனும் மர்மமிருக்க வேண்டு மென்று தோன்றுகிறது. மகாத்மா காந்தி வந்தவுடன் ஒதுக்கப்பட்ட பெஸண்டம்மையார் வாலைமீண்டும் பிராமணக் கோஷ்டிகள் பிடிக்கவாரம்பித்திருக்கின்றன. காந்தியிடம் திண்டாமைக் காந்திருக்கிறதெனத் தெரிந்தவுடன் விலகி வந்த பிடிகொப்பில்லாத பிராமணக் கோஷ்டிக்கு பெஸண்டம்மையார் பிடி சிறிது ஆறுதலையளிக்கக் கூடும். ஆனால் முறை தப்பிய வர்ணச்சிரம தர்மப் பிழையிலிருந்து தப்புவிக்க முடியாது. பெஸண்டம்மையாருக்கும் தமது தள்ளாத பருவத்தில் சோதனை காலம்போல் பிராமணர் பிராமணரல்லாத கட்சியும், ராயல் கமிஷனும்வந்திருக்கின்றன. ராயல் கமிஷனைப் பகிஷ்கரிப்ப தென்று பூரணமாய் வெளியிட்டிருக்கிறார்கள். பிராமணர்கள் முதலாவது பூரண கும்பம் வைத்தழைத்தார்கள்; பின்னர் புறக்கணித்தார்கள்; இப்போது மீண்டும் போற்றுகின்றார்கள். இந் நிலைமையில் பெஸண்டம்மையார் வேலையானது பிராமணரல்லாதாருக்கு விரோதமின்றி நடு நாயகமாயிருக்குமா வென்பதைப் பலரும் ஆவலுடன் எதிர் பார்க்கக் கூடுமென்று நம்புகின்றோம். ராயல் கமிஷனைப் பற்றி ஜஸ்டிஸ் கட்சிஇன்னும்மதில் மேற் பூனை போலிருக்கிறது. அதன் முடிவையும் பலரும் எதிர் பார்க்கின்றார்கள்.

இக் கமிஷனைப் பற்றி லார்டு இர்வின் ஹிதோப தேசம் வாழைப் பழத்தில் ஊசி யேற்றுவது போலிருக்கிறது. லார்டு பர்கென்ஹெட் இந்திய ரெல்லாம் இன்னும் சிறு பிள்ளைகளென நினைத்துக் கொண்டு பயமுறுத்துவது போற்றெரிகிறது. எவ்வளவு முன் யோசனையுடன்—எத்தகைய ராஜ தந்திரத்துடன், கமிஷன் அமைத்திருப்பதாகச் சொன்னாலும், நன்றியுள்ள எந்த அரசாங்கமும் இப்படிச் செய்ய மாட்டாது. மானமுள்ள யாரும் இதை ஏற்கவு மாட்டார்கள். இந்தியருக்கு எவ்வித ஆற்றலுமில்லையென்பதை இக்கமிஷன் விளக்கி விட்டதென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இந்து முஸ்லீம்கள் மனக் கசப்பு எப்போதும் நிலைத்திருக்கு மென்றும், அவர்களுடைய பிரித்தாளும் தந்திரம் எப்போதும் பயன் பெறு மென்றும் பிரிட்டிஷார் நம்பிவிடக் கூடாது. அவ்விருசக்திகளும் உடனேஒன்றுபடவுங்கூடும். ஐரோப்பா யுத்தத்தில் இந்திய ரத்தம் ஒரு சொட்டாவது சிந்தவில்லையென்று உறுதி செய்திருந்தால் மேற் காங்கத்தில் பிரிட்டிஷ்ப் படை பிழைத்திருக்குமா? இங்கிலாந்து தான் நிலைத்திருக்குமா? அதற்காக இதுவரையும் இங்கிலாந்து இந்தியாவுக்குச் செய்த நன்மை யென்ன? ரௌலட் சட்டமும், அடக்கு முறையும், கேள்வி முறையின்றி காராக்கிரகமனுப்புதலுமாம். இந்தியா ஜெயிக்கப்பட்ட தேசமு மன்று; பலமற்ற தேசமு மன்று; இங்கிலாந்துக்கு வேண்டாதது மன்று; இங்கிலாந்துக்கு இந்தியா இன்றியமையாததென்று சுவாமி விவேகானந்தர் கூறிய அருள் மொழிகளை ஈண்டு குறிப்பிடுகின்றோம்.

"இந்தியாவை இங்கிலாந்து ஜெயித்ததானது நாம் சம்பும்படி அடிக்கடி கேட்கப்படுவது போல் இயேசுவினால் அல்லது பைபிள் புத்தகத்தினால் ஆகிய ஜெயமன்று. அது மொகலாயர்களும், பட்டாணியர்களும் ஜெயித்தது போலுமல்ல. ஆனால் இயேசுவின் நாமம், பைபிள் புத்தகம், ஆடம்பரமான அரண்மனைகள், பூமியையே அசைத்துக் கொண்டு நடக்கின்ற ரதகஜதுரக பதாதிகளாலாய சைந்யங்களின் பலமான காலடியோசை, யுத்த பேரிகைகள், கொம்புகள், நகாரக்கள் முதலியவற்றின் சப்தங்கள், ராஜ சிங்காசனத்தின் சிறந்த காட்சி இவற்றுக்குப் பின்னே— (இவ்வெல்லா வற்றுக்கும் பின்னே இங்கிலாந்தினுடைய உண்மையான சாந்நித்தியம் எப்பொழுது மிருக்கிறது)— அந்த இங்கிலாந்தினுடைய கொடி தொழிற் சாலைகளின் புகைப் போக்கியாம்; படைகள் வியாபாரிகளாம்; யுத்தகளங்கள் உலகத்து வியாபார ஸ்தலங்களாம்; சக்கிரவர்த்தினி அதிஷ்ட தேவதையாம்; அது இதுவரையில் ஒரு பொழுதும் பார்த்திராத நூதனமாமென்று— (இங்கிலாந்து இந்தியாவை ஜெயித்தது இப்படி நூதனமென்று) இதனாலேதான் நான் முன்பு அப்படிக் கூறினேன். இந்தப் புதிய ராக்ஷச சக்தியுடன் இந்தியா இடாப்படத் தொடங்கியிருப்பதினால் இந்தியாவில் எந்த மாதிரி புதிய புரட்சி யுண்டாகு மென்பதும், அப்புரட்சியினால் என்ன புதிய மாறுதல் பிற்கால இந்தியாவுக்கு ஏற்படப் போகிறதென்பதும் அதன் பூர்வ சரித்திரத்திலிருந்து ஊகிக்கப்பட முடியாது.

மெல்ல மெல்ல இந்திய சக்ராதிபத்யமானது தங்களுடைய ஆட்சியினின்றும் போய்விட்டால் ஆங்கில ஜன சமுகத்துக்கே அபாயமாய் முடியு மென்றும், அவர்களுடைய அழிவே யாகி விடு மென்றும் ஆங்கிலப் பொது ஜனங்கள் மனதிலே எண்ணம் உண்டாக ஆரம்பித்திருக்கிறது. ஆகையால் எவ்விதத்திலாவது இந்தியாவிலே இங்கிலாந்தினுடைய ஆதிபத்தியம் காக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு இந்தியனுடைய இருதயத்திலும் பிரிட்டிஷ் ஜன சமுகத்தினுடைய பல மிகுந்த கௌரதையையும், மேன்மையையும் சிறந்தனவாகக் கொள்ளும்படி செய்தலே இதற்கு வழி யென்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்தப் பரிகாச காமானதும், பரிதாபகரமானதுமான எண்ணம் ஆங்கிலேயர்களுக்குள்ளே எப்படி ஏற்பட்டு வருகிற தென்பதையும், இவ்வெண்ணத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்கு அவர்கள் எப்படி ஒரே மாதிரி வேலை செய்து வருகிறார்களென்பதையும் ஆராய்ந்து பார்த்தால் சிரிப்புக்கும், அழுகைக்கும் ஒரே சமயத்தில் இட முண்டாகின்றது. ஆங்கிலேயர்கள் இந்த இந்திய சக்ராதிபத்தியத்தை சம்பாதிப்பதற்கு உடைத்தாயிருந்த தைரியமும், விடாமுயற்சியும், காரியத்தில் அத்தியந்த தேசிய ஒற்றுமையும், ஐச்வரியம் எல்லா வற்றுக்கும் தாயாகிய இந்தியாவையே இங்கிலாந்தினுடைய முக்கிய வியாபார ஸ்தலமாகச் செய்திருப்பதும், சாஸ்திரத்தின் உதவி பெற்றிருப்பதுமான என்றும் விழித்துள்ள வியாபார சாமர்த்தியமுமாகிய லக்ஷணங்கள் அவர்களின் சாதீய வாழ்க்கையினின்றும் அழிக்கப்படாமலிருக்கும் வரையில் இந்தியாவிலே அவர்களுடைய சிங்காசனம் அசைக்க முடியாததாயிருக்கு மென்பதை இந்தியாவிலே வசிக்கும் ஆங்கிலேயர்கள் மறந்து கொண்டு வருகிறார்கள் என்று தோன்றுகிறது. பிரிட்டிஷ் லக்ஷணத்தில் இந்தக் குணங்கள் உள்ளுற அமைந்திருக்கும்வரையில் இத்தகைய இந்திய சக்ராதிபத்தியங்கள் ஆயிரக் கணக்காக இழக்கப்பட்டாலும், மறுபடியும் ஆயிரக் கணக்காக சம்பாதிக்கப்படும். ஆனால் அந்தக் குணங்களாகிய ஆற்றினுட் போக்குத் தடுக்கப்படுமானால் பிரிட்டிஷ் கௌரதையையும் மேன்மையையும் பற்றிப் பிரமாதமாகப் பேசுவதனால் மாத்திரம் ஒரு சக்ராதிபத்தியம் ஆளப்படுமா? ஆகையால் அத்தகைய சிறந்த குணங்கள் இன்னும் ஆங்கிலேய ஜன சமுகத்தினிடத்திலே உச்சஸ்தானத்தை வகித்திருக்க அர்த்தமற்ற கௌரதையைக் காப்பாற்றுவதற்கென்று அவ்வளவு சக்தியைச் செலவழித்தல் சற்றும் பயனற்றதாம். குடி ஜனங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு அந்த சக்தி உபயோகப்படுத்தப் பட்டால் ஆளும் ஜாதியார், ஆளப்படும் ஜாதியார் ஆகிய இருதிறத்தவருக்கும் நிச்சயமாய் அது ஒரு பெருத்த லாபமாயிருக்கலாம்".

மேலே கண்ட மகா வாக்கியங்களை மிஸ்டர் லாயிட் ஜார்ஜூம் இந்தியா இரும்புத் தூண்களென்புகழப்பட்ட ஸிவிலியன்களும் இந்தியாவிலுள்ள எல்லா ஆங்கிலேயர்களும் நன்றாய் உணர்ந்து பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வங்க நாட்டுத் தலைவர்களைப் போல் வைஸிராய், கவர்னர்கள் ரகஸ்யமாக அழைக்கும் போதே மறுத்திருக்க வேண்டும். ஏதோ மரியாதைக்காகப் போய் விட்டார்கள்; மனதிற்குப் பிடியாமல் வந்து விட்டார்கள். பகிஷ்கரிப்பதையே உறுதி செய்து கொண்டதும் போற்றத்தக்கது. ஆனால் கடைசி வரையும் யார் யார் செத்தாலும் உருவிய வாளை உறையிற் போடாமல் வெற்றியை யிட்டு முன் செல்லும் வீரனைப் போல் ஒன்றைப் பிடி; தன்மைப்படு; உறுதிப்படு மனமே யென வேதாந்த லட்சணத்துடன் பகிஷ்கரிப்பை விட்டு ஒரு அடியாவது விலகாமல் நிற்க வேண்டும். அல்லது எட்டிலெழுதினதை எடுத்தெறியக் கூடாது; தலையிலெழுதினதைத் தள்ளி விடப் போகா தென்று தலை விதியை நொந்து கொண்டு கமிஷனைப் பூரணமாய் ஆதரிக்க வேண்டும். எட்டாத பழம் புளிக்கு மென்று

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நம் மித்திரனுக்கு உபகாரம்.

மித்திரா! வருக வருக. நின் வரவு நல் வரவாகுக. நீ வளர்பிறைச் சந்திரனே போல் வளர்ந்திலங்குக! ஊழிக் காலம்மட்டும் உயிர் பெற்றிருக்க! நம சமூகத்திடையே பத்திரிகை யொன்றில்லாக் குறையால் நம் மக்கள் மனமுடைத்தக்கால் ஜெனனமாகிக் கவலை தீர்த்த செல்வனே! நினக்கு என தன்பின் வர்தனம் உசித்தாகுக. முத்திடத்தே பிறந்து முத்திடத்தே வளர்ந்து வரும் மித்திரா! நின் முத்து மொழிகளை எத்திறத்தாரும் செவிமடுத்து இன்புறுகிறார்கள். ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் நம் சமூகத்தார்களை நமது லக்ஷியம் எனும் ஒரு கட்டத்திற்குள் வைத்து அப்போதைக்கப்போது அறிவுச் சுடர் கொளுத்தி காட்டு நிலையை உணர்ப்பித்து உருப்படுத்தி வரும் நின் பேருபகாரத்தை நாடார் யாரும் மறப்பதற்கில்லை. காட்டு வழி போகாமல் நீ காட்டு வழி பின் பற்றி கண்டத்தேறி வருகிறோம். உனக்கு நல்லாசிர்வாதங்கள் பெருகுவதாகுக!

யானோ ஏழைக் குஷ்டரோகி. என் போன்ற துர்ப் பாக்கியசாலிகளுடன் இலங்கைத் தீவில் கொளும்புக் கருகாமையில் ஹெந்தலை யென்னுமிடத்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறேன். நோய்பற்றிய எங்கள் கவலை நின்னிடத்தரும்பும் வசனங் கண்டொழிகிறது. எங்களுக் காறுதலாக வாரந்தோறும் கடல் கடந்து வரும் நின் பெருந்தகைமைக்கு யாங்கள் வந்தனம் செலுத்துகிறோம். நின் ஊழியங் குறித்து எம்மட்டும் எக்காலத்தும் ஏத்திப் போற்றிக் கொண்டிருக்கலாம். நீ ஸ்தோத்திரப் பிரியனல்ல வென்றஞ்சியே சுருக்கிக்கொள்கிறேன். ஒவ்வொரு நாடாரும் உனக்கு சந்தா வுமூதவி வளர்ப்பித்து வர கடப்பட்டுளார் என்பதைத் தாழ்மையாய்த் தெரிவித்துக் கொள்கிறேன். நின் கீர்த்தி யோங்குக.

எம். பொன்னையா நாடார்.

குறிப்பு:— இவ்வபிமானி நோய் வாய்ப்பட்டிருப்பதற்காக மிகவும் விசனிக்கின்றோம். கூடிய சீக்கிரத்தில் பூரண சுகமடைய இறைவன் கிருபாவிப் பாராகவும். (ப—ர்)

### வேண்டுகோள்.

ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்து அதனைவளர்க்க முயன்றுவரும் சங்கங்கள், கழகங்கள், வாசக சாலைகள், ஏனைய பொதுஸ்தாபனங்கள் யாவும் தயவுசெய்து தங்களுடைய முழு விலாசங்களையும் அடியில் கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

விலாசம்:—

காரியதரிசி

"காரைச் சிவனடியார்

திருக்கூட்டம்"

காரைக்குடி.

### ஓர் திருத்தம்.

சென்ற 14—11—27 மித்திரனில் 6-ம் பக்கம் 4-ம் கலத்தின் கீழுள்ள குறட்பாவின் ஈற்றடியில் புக்கார் என்றிருப்பதை புகார் என்று வாசித்துக் கொள்ள வேண்டுகின்றனம்.

---

திரும்பவும் கூடாது. ஒரே மனதாய் எல்லாத் தலைவர்களும் இருந்து மகாத்மா காந்தி ஒத்துழையாமைக்குப் புத்துயிர் கொடுத்தாலன்றி இந்தியாவுக்குக் கதி மோட்சமில்லை. ஆங்கிலேயர்களை ஐயர் வீட்டுக் கொல்லைக் கிள்ளுக் கீரையாக நினைத்து வெறும் சல சலப்புக் காட்டுவதில் ஒரு பயனுமில்லை யென்பதை நமது தலைவர்களுக்கு ஞாபகப்படுத்துகின்றோம்.

## சில தமிழ் மொழிகளின் திரிபும், பொருளும்.

ஸ்ரீ. எம். கலியாணசுந்தரமுதலியார்.

சான்றோர்—சான்றார்.

இப்பெயர் சாணர் என்று வழங்கி வருகிறது.

சான்று—சாக்ஷி, நேரில் பார்த்தவன், ஒரு வழக்கில் சாக்ஷி சொல்லுவது, கண்டதைக் கண்டவனே சொல்லுவது.

அவ்வாறு நேரில் கண்டவர் சொல்லுவதைக் கேட்டுத் தீர்ப்புச் சொல்வது வழக்கம்.

சில வற்றை நீதிபதி தானே நேரில் சென்று கண்டு தீர்ப்புச் சொல்லுவார். வழக்கு அதிகமாக ஆகவே தான் நேரில் பார்ப்பது குறைந்தது.

பார்ப்பது கீழிருந்தும் மேலிருந்தும் ஆகும்.

பலரும் அறியச் சண்டையிடுவதையும், வெளிப்படையாகத் தவறு செய்வதையும் கீழிருந்தே காணலாம்.

கீழிருப்போர்க்குத் தெரியாமல் செய்வதையும், கீழே (பூமியில்—தரையில்) கூட ஒருவருமில்லை யென்றறிந்து திருடினாலும், திருட்டுத்தனமாக எது செய்தாலும் எல்லாவற்றையும் மேலே யிருப்பவன் அறிவான். மேலிருப்போர் மரமேறியும், சூரியனும், சூரியனைப் போன்ற விளக்க அறிவினையுடைய அறிஞரும் ஆக மூவராகும்.

மரமேறி உயரத்திலிருப்பதால் பிறர் ஒருவருமில்லை யென்று நினைத்துக் கீழாகச் செய்யுங் காரியங்களைக் காண ஏதுவாகும். நன்றாக அறிவான். பார்வை எட்டும் வரையில் அறிவான். நேரில் பார்த்தவன் சாக்ஷியாகிய சான்றோன் ஆவான்.

சூரியனுக்கு எல்லாந் தெரியுமானதாலும், இருளை விளக்குவதாலும், சூரியன் மேலாக விருந்து விளங்கி விளக்குவதாலும் சாக்ஷி யென்ற சான்றோன் ஆவான்.

"கிழக்கே யிருந்து மேற்கே போகிறானே அவனறிய" என்பதையும், "எல்லாம் அந்த பகவானுக்குத் தெரியும்" என்பதையும் பலருங் கேட்டிருக்கலாம். அதாவது சூரியனைச் சாக்ஷி வைக்கிறது வழக்கு. சூரியன், மக்கட் சான்றோரினும் உயரிய காரணனான சான்றோன் என்பதைப் "பலர் புகழ் ஞாயிறு படரினல்லதைக் காண்டல் செல்லாக் கண்போல்" என்றதால் காண்க.

அறிஞரும் தம் ஞானக் கண்ணால், அறிவுக் கண்ணால், மெய்யையே காண்பவரானதால் இவர் மற்றவரினும் மேலோராய் விளங்கித் தாம் கண்ட மெய்யை விளக்குவாராதலால் சான்றோர் எனப்படுவர்.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றபடிக் காண்பவராதலாலும், "பொய் கண் டகன்ற மெய்கண்ட தேவன்" என்றபடி பொய்யைக் கண்டு, அக்கண்டதன் பயனாக அகன்று, அகன்ற விடத்து உள்ள மெய்யையுங் கண்டு தேவர் என மேலாக, மேன்மையாக விளங்குபவர் சான்றோராவர்.

1. இயல்பாக விளங்கும் ஒளிப் பிழம்பாகிய சூரியன் முதன்மையாகும்.

2. ஒப்புமையால் சூரியனை யொத்த ஞான விளக்கமுள்ள அறிஞர் நடுவணதாகும். இவரே மக்களின் அறிவை விளக்குவார். குருவென இருந்து மக்கட்கு இறை நிலையைக் காட்டுவிக்குங் குரவர் ஆவார். இறைவற்கும் மக்கட்கும் இடையிலுள்ள இடையாரவர். இவர் சூக்கும அறிவால் உயர்ந்தவர்.

3. தூல உடலால் மரமேறி உயர்ந்து இருந்து பார்ப்பதால் மூன்றுவதாகும்.

கள்ளைக் குடித்தவர் மனத்தில் கள்ளம் இராது; மறைப்பு இராது. சொல்லக்கூடாதென்று முன்னிருந்ததை விளங்கச் சொல்லுவதால், விளம்புவதால் கள்ளிற்குச் சொல் விளம்பி யென்று பெயர். கட்குடித்தவர் அதாவது கள்ளுண்டவர் கண்டதையே சொல்லுவர். மெய்யையே சொல்லுவார். ஞானம் விளங்கும். மெய்யே ஞானமாதலால்,

மூன்றுவதாகிய சான்றார், சாணர், சாணர் என வழங்கப்பட்டார்.

கன்றுக்குட்டி—கன்னுக்குட்டி, கண்ணுக்குட்டி.

மென்று தின்றான்—மெண்ணு தின்னான்.

குன்றுமேடு—குண்ணுமேடு.

வருவானென்று நினைத்தேன்—வருவாண்ணு நினைத்தேன்.

சென்று போயிற்று—சென்னு போச்சு

அன்று—அன்னு.

மன்றாடிக் கேட்டான்—மன்னாடிக் கேட்டான்.

தென்றல்—தென்னல்.

நன்றாயிருக்கிறது—நன்னாயிருக்கிறது, நன்னாயிருக்கு, நண்ணாயிருக்கு.

தான்றிக்காய்—தானிக்காய்.

பன்றி—பன்னி, பண்ணி.

குன்றிப் போனான்—குன்னிப் போனான், குண்ணிப்போனான் என்ற வழக்குப்போல, சான்றார்—என்பது சாணர் என வழக்கு என்று கொள்க.

இவர், கள்ளுண்பதே யில்லை.

இக்காரணத்தால் இவர்க்கு நாடார் என்ற பெயர் வந்தது.

எதை நாடார் என்ற கேள்விக்குக் கள்ளைத் தாம் நாடார் என விடையளிக்க.

தொழில் என்றது பிறர் பொருட்டுப்பயன் கருதி, கூலிபெறச் செய்தல்.

இவர் தொழில் தம் பொருட்டேயல்ல; தாம் அருந்துவதற்கேயல்ல.

பிறர் அருந்துவதற்காகவே இவர் தொழிற் செய்வது.

அருந்தும் பிறர்—சுரர், பூசுரர் ஆவார். இது முன் வழக்கு. மொழியாக்க காலத்தது.

கள்ளிற்குச் சுரை யென்று பெயர்.

மரத்தில் ஏறி யிறங்குவதே கஷ்டமானதால் அப்போது கள்ளைக் கொண்டு வருவதற்குச் சுரைக் குடுக்கையைத் தவிர வேறு எவ்வித பாத்திரங்களும் பயன் படா: பாத்திரமும் கனக்கும்; பண்டமுங் கெட்டுப்போம்.

ஆகையால் சுரையைவிட இலேசான பாத்திரம் வேறில்லை யென்று கண்டு பிடித்தார்கள். ஏறி யிறங்கும்போது பாரம், கனம், தோன்றாது; அதிகமிராது. சுமையான பாத்திரமானால் ஏறும்போதும் இறங்கும் போதும் கஷ்டம்; தூக்கிக்கொண்டு ஏறும் போது கீழே யிழுக்கும். இலகுவாயேறமுடியாம லிருக்கும். இறங்கும் போதும் கனத்தால், கள்ளைக்கொண்டு வருவதால் உண்டாகும் அதிகப்படி கனத்தால், நிதானமாயிறங்க முடியாமல் வேகமாய்க் கீழே யிழுத்துத் தள்ளுவது போன்றிருக்கும்.

ஆகையால் சுரையைத் தேர்ந்தார்.

சுரை—கள்.

கட்குடிப்போர்—சுரர்.

பூமியில் உண்டாகுங் கள்ளாகிய சுரையைக் குடித்தவர் பூசுரர் எனப்பட்டார். பூ—பூமி.

பூ என்ற மலரில் உண்டாவது தேன்.

தேன், மது, கள் இவை ஒரு பொருள்தரும்.

பூமியில் வானளாவும் தெங்கில் எடுப்பது கள், மது, சுரை.

பூவினின்றும் வரும் தேன் என்ற கள் மேன்மையாகும்; இனிப்புடையதாகும்.

பூ—மென்மையைக் குறிப்பது. "மென்மை மேன்மை", சுரை யென்ற கள்ளோ கீழ்ப்படுத்தும்.

"காதல் கவருடல் கள்ளுண்டல் பொய் மொழிதல் ஈதல் மறுத் தலிவை கண்டாய்" என்பது போன்று பல உள்ளன.

நாயனார் கள்ளுண்ணாமை யென்ற அதி காரத்துட் கூறியதைக் காண்க.

"உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா லெண்ணப்பட வேண்டாதார்"

## செய்தித் திரட்டு.

லாகூர் ஆரியசமாஜத்தைச் சேர்ந்த நானக்சந்த் என்பாரை கொலை செய்த பெரோஸ் என்ற முஸ்லீம் மரண தண்டனை விதிக்கப்பெற்றாராம்.

* *

பஞ்சாப்பில் விவாகமடைந்த அழகிய பெண்களை 30 பேரடங்கிய ஒரு கோஷ்டியார் கொள்ளையிட்டு விற்பனை செய்துவந்தார்களாம். விலை கொள்ள வருபவர்களுக்கு அக்கூட்டத்தாரில் இரு வக்கீல்கள் பத்திரமெழுதிக்கொடுப்பார்களாம். இப்போ தவரனை வரும் பிடிபட்டுக் கைதியானார்களாம்.

* *

மாஜி கெய்ஸரின் மனைவியான ஹர்மினின் 2-வது புத்திரர் பிரின்ஸ் ஜியார்ஜ் வில் ஹெம்கரோலாத் ஒருமோட்டார் சைக்கிள் விபத்தின் காரணமாய் ஆஸ்பத்திரியிலேயே தேக வியோகமானார்.

* *

தென்னாடு பூராவும் தீபாவளியொட்டி அகில இந்திய சர்க்கா சங்கத்தின் ஆதரவில் ரூ 90000 க்கு கதர் விற்பனையாகியிருக்கிறதாம்.

---

"ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென் மற்றுச்சான்றோர் முகத்துக்களி"

என்ற இரண்டு குறள்களாலும் சான்றோர் கள்ளுண்ணாரென்பது விளங்குகிறது.

நாடாரும் கள்ளை நாடாதவரானதாலும், உண்ணாதவரானதாலும் சான்றோர் எனப்பட்டார் என்க. இது நாயனார் வழக்கு.

இனிச் சேக்கிழார் வழக்கைப் பெரிய புராணம் ஏனாதி நாயனார் புராணத்தின் இரண்டாவது செய்யுளினிறுதியில் "ஈழகுலச் சான்றார் ஏனாதி நாதனார்" என்ற தாலறிக.

நாயனார் காலத்தில் சான்றோர்

சேக்கிழார் காலத்தில் சான்றார்

பிந்திய காலத்தில் சாணர்

என வழங்கப்பட்டு வருவதைக் காண்க.

கள்ளுண்போர் பூசுரரும், கள்ளுண்ணாதார் சான்றோரும் எனப்பட்டார்.

இப்போதுள்ள பூசுரரில் பலர் கள்ளுண்டதை நிறுத்திவிட்டார்கள்.

நாகரீகத்தாலும், ஆங்கிலப் பயிற்சியாலும் கள்ளை வெறுத்துச் சீமைப் பீப்பாக்களில் விழுந்து கிடக்கிறார்கள்.

கள் முன் காலத்தில் மதுவாகிய தேனாயிருந்தது. இக்காலத்தில் நாறுகிறது.

ஆனால் சிலர் மாத்திரம் "தொன்மை மறவேல்" என்ற வாக்கியத்திற்கு இலக்கியமாக விளங்குகிறார்கள்.

இது பழைய கால வழக்கையும், தற்கால வழக்கையும் பற்றியதே யன்றி வேறல்ல என்றுணர்க.

இச்சான்றார் வகையில் சிலர் இக்கள்ளிறக்குந்தொழில் பிறர் பலருக்குங் கேடு விளை விப்பதை யறிந்து, இத்தொழிலை விட்டு வேறு தொழிலில் அமர்ந்து வருகிறார்கள். பலர் நிலச்சுவான் தார்களாயும், உத்தியோகஸ்தர்களாயும், வணிகர்களாயும், தனிகர்களாயும் இருக்கிறார்கள்.

இந்த ஒரே தொழிலாளர் வகையாரே இத் தொழிலால் விளைவதைக் கொள்ளாதவர். மற்றெல்லாத் தொழிலாளரும் அவரவர் தொழிலின் விளைவைக் கொள்ளுவார்; அருந்துவார்.

"தேனெடுத்தவன் புறங்கையை யாவது நக்காமலிரான்" என்பது பழமொழி.

இச் சான்றார்க்கு இதுவும் இல்லை யென்றுணர்க. தொடார்; நாடார்.

இம்மாதிரி தொழில் எதுவுமில்லை.

"தினற் பொருட்டாற் கொள்ளா துலகெனின் யாரும், விலைப் பொருட்டா லூன்றருவாரில்" என்ற தன் கருத்தை யறிந்து கள்ளின் கெடுதி தம்மால் மற்றையோர்க்குக் குறைவு பட்டவரையில் படட்டும் என்ற நல்ல நினைவோடு, பிறரைக் கெடுதலுக்குள்ளாக்கும் பழியைத் தாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய தில்லையென்ற பழிக்கஞ்சும் நினைவோடு அத்தொழிலை விட்டதாகத் தெரிகிறது.

இதுவே மேன்மையிலும் மேன்மை.

"தமிழ் நாடு".

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# பொழுது போக்கு.

(பொய்யில்லான் பொறித்தது.)

ராஜீய மேகம் சூல்கொண்டு வருஷிக்கும் இது சமயத்து, சாதி விப்காரங்கள் ஓரோவிடங்களில் தலைதூக்கப் பார்க்கின்றன. ஆறிக்கிடக்கின்ற தீயை ஊதிப் பெருக்கின்றதுபோல் துவேஷத்தைப் பேணுந்தி வழியில் இறங்கி கட்டுரைகள் எழுதி பத்திரிகைகளில் வெளியிட ஆரம்பித்து விட்டார்கள். முளையிலேயே கிள்ளி யெறிய, கட்டுரைகளுக்கு இடங்கொடாதிருந்துவிடவேண்டியது தேசப் பொறுப்புள்ள பத்திரிகைகளின் கடமையாகும். ஆரம்பத்தில் ஒருவருக்கிடங் கொடுத்துவிட்டால், பின்னால் அதற்கொரு மறுப்பு வரும். அதற்கும் இடங்கொடுக்க வேண்டும். பின் அதற்கொரு மறுப்பு வர விடங்கொடுத்து இப்படி விபகாரம் முற்றிக்கொண்டேபோனால் விளையும் பயன் யாதாகும்? அமைதியிராது. நாட்டம் எல்லாம் சாதியைப் பெயரளவில் உன்னத நிலையில் நாட்டத்தான் செல்லும். தேசத்தை மறந்துவிடுவார்கள். ஏதோ நல்லதிஷ்டவசமாய் சிறிதுகாலமாக தேசப்போக்கில் விழி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இத்தகையதகராறுகள் வந்து முன்னின்றால் 'பழைய குருடி கதவைத்திறடி' யென்று கச்சை வரிந்து கட்டிவிடுவார்கள். நெருப்பாறு மயிர்ப் பாலம் தாண்டுந் தன்மைத்தாம் நம்மிந்தியாவில் சாதி ஐக்கிய நிலை. இந்நிலையில் ஒவ்வொருவரும் சர்வ சாக்கிரதையாயிருந்து வரவேண்டியிருக்கிறது. இதை ஆங்காங்குள்ள அறிவாளிகள் கவனித்தற்குரியராவர்.

*   *

இப்போது அறிவாளிகளெனக் கூறிக்கொள்பவர் ஒரு சிலரே எழுத்து வல்லபத்தில் துவேஷத்தைக் கிளப்புகிறார்கள். இத் துவேஷ புத்தியை ஆரம்பத்திலேயே சுட்டுப் பொசுக்கவேண்டியதிருக்க, சில பத்திரிகைகள் அறிந்தோ அறியாமலோ இடங்கொடுத்து விட்டன. இவற்றிற்கு மறுப்புகள் வந்தால் அவற்றையும் பிரசுரித்து விட்டால் தான் பாரபக்ஷமில்லாததாகும். இப்பத்திரிகைகள் இவ்விஷயமாக நியாயமாய் நடந்துகொள்ளப் பின்வாங்கக்கூடாது. என்பதை யறிய வேண்டும். ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒரு வகுப்பாரை இன்னொரு வகுப்பார் இழிவு படுத்த முற்படும் போது அவர்களும் இவர்களின் பூர்வ கோத்திரத்தை யெடுத்து வேசி குலத்தவர்களென வெளிப்படுத்தி விடுகிறார்கள். இதனால் இரு சாராருக்கும் பயப்பதொன்றுமில்லை. ஒரு காலத்தில் ஒரு சாரார் ராஜரீகம் செய்திருக்கலாம்; ஒரு சாரார் தாசி குலத்தவரா யிருந்திருக்கலாம்; ஒரு இனத்தார் அடிதொழில் புரிந்திருக்கலாம். இது போழ்து அது பற்றிக் கவலையில்லை. எல்லோரும் ஆங்கிலேயருக் கடிமைகளாகவே இப்போதிருக்கிறோம். இதினின்றும் விடுபடவே எல்லோரும் முயற்சிக்க வேண்டுமேயொழிய, சாதிபேதம் பண்ணி பூர்வகோத்திரப் பெருமை தேட துவேஷ அந்தகாரத்திலிறங்கி ஒன்றோடொன்று மோதிக்கொள்வதில் பிரயோசனமில்லை யென்று கொள்வார்களாக.

*   *

புஷ்பங்களிடத்தே பொழியுறும் மதுவைக் குடித்து வண்டுகள் ரீங்காரித்துத் திரிவதேபோல், கள், சாராய முதலிய மதுபானங்களை உட்கொண்டு நம் நாட்டுமக்கள் ஓங்காரித்து வருகின்றனர். இக்குடி கேட்டால் விளையும் அனர்த்தங்கள் அனந்தம். அனர்த்தம் என்றறிந்தும் தேனில் ஈக்கள் விழுந்திறக்கும் மாதிரி மாண்டு மடிகிறார்கள். கேடறிந்த சிலர் சுய புத்தி கொண்டு அல்லது சொற்புத்தி கொண்டு தப்பித்துக்கொள்கிறார்கள். இது அபூர்வம். எல்லாம் மண்டியிட்டுக் குடித்தே வருகின்றனர். யானையுண்ட விளாங்கனிபோல்ஆகி விட்டார்கள். மதுபானம் கெடுதிவிளைவிப்பது என்று ஒப்புக்கொண்டு பல அரசாங்கங்கள் குடியை ஒழிக்க சட்டங்கள் பிறப்பித்து வருகின்றன. நம் அரசாங்கத்தார் எப்படி யெனில், இதன் மூலம் வருமானத்தைப் பெருக்குகிறார்கள். இப்படி வருமானங் கருதினால் குடியை சட்டங்கொண்டு எப்போதொழிப்பது? வருமானத்தை வேறு நல்வழியில் கூட்டிக்கொண்டு இப்பாழுங்குடியை மாளச் செய்யக் கூடாதாவென தேசமக்கள் க்ஷேமங்கோரும் தலைவர்கள் கேட்கிறார்கள். மது வருமானத்திற்குப் புதுவருமானம் ஒன்று வரக்கூடிய யோசனையும் கூறுகிறார்கள். கவர்ன்மெண்டார் யோசிப்போமென்கிறார்கள். நல்ல காரியத்தில் தலையிடவும் யோசிக்கவேண்டுமாம்! வருமானத்தைக் கருதுகிறார்களே யொழிய, அதனால் வரு மானத்தைக் கவனித்தார்களில்லை. குடி ஜனங்கள் நலிவுறுகிறார்களே என்ற கவலையுங் காணோம். மதுவே யுன்னால் கெட்டதிதுவேயென மது மயக்கந் தெளிந்தவர்கள் புலம்புகிறார்கள். இப்புலப்பத்தைக் கேட்டாகிலும் மதுவில் மிதந்துகிடப்போர் கரையேறுவார்களாக. என்று சட்டம் கட்டாயப்படுத்துமோ அன்று தான் பூரணமாய் விட்டொழிப்பார்கள் என்பதுறுதி. இக்கருணை கவர்ன்மெண்டுக்கெப்போது உதிக்குமோ!

*   *

தற்போது ஒவ்வொரு இல்லத்திலும் சமையற்பாகங்கள் சீர் கேடுற்று வருவதாகவே தைரியமாய்க் கூறலாம். வயிறுக்காக உண்பதா உயிருக்காக உண்பதா வென்ற தத்துவம் மங்கி விட்டது. நாவுருசி கொண்டு வயிறு நிரம்பினால் போதுமென்ற தன்மையிலிருக்கிறது. சமையற்பாகங்களில் கடைச் சரக்குகள் சேர்ப்பதில், ஒவ்வொரு சரக்கின் குணாகுணத்தை யறிய மாட்டாது இன்ன கறிக்கு இன்ன சேர்க்க வேண்டுமென்ற மனனமே கொண்டுள்ள காரணமாய் அச்சரக்கை உபயோகிக்கவேண்டிய விதத்தில் உபயோகிக்காமல், ஏதோ வாழையிலையில் நீர் தெளிக்கும் சாஸ்திரம்போல் தினசுக்குக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப்போட்டு கறி சமைத்து விடுகிறார்கள். ஒவ்வொரு சரக்கின் தன்மை யோர்ந்து இது ஆரோக்கியம் வளர்ப்பது; இது இன்ன நோய்க்கு எமன் போன்றது என விலக்ஷணப்படுத்தி பாகஞ்செய்த பாடொழிந்து விட்டது. எச்சரக்கு ஆரோக்கியப் பொற்சரக்கோ அச்சரக்குத்தான் மிச்சமாய்ப் புறக்கணிக்கப் படுகிறது. உதாரணமாய் கொத்தமல்லியை எடுத்துக் கொள்வோம். இதன் குணத்தை ஆகாய மட்டுமளாவிப்புகழலாம். சுருக்கமாக சஞ்சீவிக்கொப்பாகும் என்னலாம். இதனது நிலைமை தற்போது என்ன? பெரும்பான்மையாக மாமிசக் குழம்பிற்கு மட்டுந்தான் வாடை கமழ்வதற் குபயோகிக்கப் படுகிறதேயன்றி மற்றக் கறி வகையில் சேர்க்கப் படுவதில்லை. சேர்த்தால் ஓர்வித புல்வாடை யடிக்கிறதெனத் தள்ளிவிடுகிறார்கள். இத் தள்ளுதலோடு தமது ஆரோக்கியத்தையும் தள்ளுகிறார்களெனவே கொள்ளவேண்டும். மற்றப்படி இக் கொத்தமல்லி ஒரு சிறிதளவில், இதன் பெருமையறிந்தவர்களால் துவையலாகவும், கஷாயமாகவும், ரசத்தில் செடிரூபத்தில் தாளித சாமானாகவும் உபயோகிக்கப் பட்டு வருகின்றது. இப்படியே ஒப்பற்ற சரக்குகளாகிய மிளகு, வெள்ளைப் பூண்டு முதலியனவும் புறக்கணிக்கப் படுகின்றன. பேர்மிளகு ரசம்! யாராவது ரசத்திற்கு மிளகு சேர்த்து வருவதைக் காண்கிறோமா? காண்பினும் மிகமிகச் சொற்பம். வெள்ளைப் பூண்டு வெகுவாகத் தள்ளப்பட்டு நோய்க்கு மருந்தாகவே கொள்ளப்படுகிறது. இம்மாதிரியே பல கறிவகைச் சாமான்களும் விடுபட்டுவருகின்றன. கீரையென்றால் கேவலமாய் எண்ணப்படுகிறது. இது கொடுக்கும் ஆரோக்கியம் எம் மட்டு! மகாத்மா காந்தியின் முக்கிய உணவுகளில் கீரையும் ஒன்றென்பதை யறிவார்களாக. இப்படிப்பலவித ஆரோக்கிய சரக்கு கறிவகைகளைத் தவிர்த்து விட்டு நோய்க்கிடங்கொடுத்தால் தேகந் திடங்கொள்வதெங்ஙனம்? திடகாத்திர சுகவாசிகளாயிருக்க விரும்புவோர் இத்தியாதி விடயங்கள் பற்றி வெளியீடாகும் ஆரோக்கியப் பிரசுரங்களை வாசித்துணர்ந்து அவற்றின்படி நடப்பார்களாக.

*   *

சென்ற பொழுது போக்கில் ஆலயப் புனித விஷயமாய் தேவதாசிக்குப்பையை அப்புறப் படுத்தவேண்டுமென்ற அவசியம் குறிப்பிடப்பட்டது. கோயில்களிலிருந்து அள்ளியெறிந்தால் அக்குப்பைகள் சிதறி நாட்டுக்குள் ஆங்காங்கு ஏராளமாய்க் குவிந்து கிடக்கும் இத்தகைய குப்பைகளோடு சேர்ந்து குப்பைகள் ஒரு அடி உயரமாகத் தெரியும். இக்குப்பைகள் இனி நாட்டுக்குள்ளேயே இருக்கக் கூடாதென்பது பலருடையவும் நோக்கம். எல்லோரும் மையல் இருளில் நடந்து இவற்றின் மேல் இடறி விழுந்து விடுகிறார்கள். விழுந்தவர்கள் எழுந்திருக்க முடியாது பெரும்பாலும் இறந்து விடுகிறார்கள். உயிர்க்கானியாயும், சன்மார்க்கவழிகளை மறைத்துக் கொண்டும், குப்பை நிறைந்த நாடென குப்பைக்காரி மிஸ். மேயோ போன்ற ஸ்திரீகள் ஏளனம் செய்வதற்கேதுவாயு மிருப்பதால் அறவே ஒழித்து விடுதல் உசிதம். ஒழியும் நாள் என்நாளோ! பதிவிரதா ரத்தினங்கள் அதிசோதியாய் விளங்கி வந்த நம் பாரத நாட்டில் பரத்தையர் குழாங்கள் விர்த்தியாகி வரப்பார்த்திருப்பது நாட்டுக் கிழுக்கன்றோ? இவர்களால் எமனுலகு புக்கவர்கள் எண்ணத்தாமா! நாயினுங்கேடாய் அலைபவர்களும், நடக்க சக்தியற்றவர்களும், படுக்கைப் பிணமாயிருப்பவர்களும் எத்தனை பேர்! இவர்கள் வீசி வைத்திருக்கும் வலைகளில் தினே தினே சிக்குறுபவர்கள் எத்தனைபேர்! எண்ணிறந்த எமன்கள் அன்றோ பெண்ணுருவாய் வந்திருக்கின்றனர்! பயங்கரம்! இவர்களுக்கு வேறு தொழில் இல்லையோ? ஏனில்லை. மேனிமினுக்குடன் தளுக்கு செய்து காலந் தள்ளப் பார்க்கிறார்கள். இவர்களொழியும் வரை ஆடவர்க்காபத்தும் நாடதற் கபகீர்த்தியுமேயாம். ஆடவர்களே! வேண்டாம் வேண்டாம் இவர்கள் ஆசை. உங்கள் கண்கூடாக எத்தனை பேர்கள் கெட்டழிந்திருக்கிறார்கள்! அழிந்து வருகிறார்கள்!! சிறிது சிந்தித்துப் பார்த்துத் தெளியுங்கள். தாசித் தாய்மார்களே! இரக்கங் காட்டுங்கள். உங்களால் நாடு கெட்டுப் போகாதிருக்க நாடுங்கள். இப்போது புரிந்துவரும் இழி தொழில் நீக்கி எழில்தொழில் தேடுங்கள். விளக்கொளிபோல் உங்கள் மினுக்கொளி காட்டி மக்களை விட்டில் போல் விழுந்து மடியச் செய்யாதிருக்க மனங்கூடுங்கள். பதிவிரதா சிரோமணிகளின் துதி பாடுங்கள். இதுவே தாங்கள் நாட்டுக்குச்செய்யும் நலன்.

சேல் விழி தாசிவாய் சிந்துறு
[சொற்கள்—தீம்
பால் களி போலினும் பச்சை
[நாவியே.

குணம் கெட்ட வேசையரின்
[குலாவல்கொண்டார்--வெறும்
பிணம் பட்டுப் போவதன்றி
[பின்னேதுமில.

## நாடார் மஹாஜன சங்க நிர்வாக மெம்பர்களுக்கோர் வேண்டுகோள்.

கும்பகோணத்தில் நடைபெற்ற நாடார் 11-வது மகாநாட்டு நடவடிக்கை யடங்கிய ரிப்போர்ட் புஸ்தகம் ஜெனரல் செக்கிரட்டரி அவர்களிடமிருந்து அச்சிட்டு வெளிவந்திருக்கிறது. அதில் சிவகாசிமாநகர் நாடார்கள் வருந்தத்தக்க விஷயமாயும், ஸ்ரீமான் வீ. சந்திவீர நாடார் அவர்களையும், அவர்களது சகாக்களையும் வீண் துவேஷமாகவும், முக்கூடல் வாசிகளை இகழ்ச்சியாகவும் அச்சிடப்பெற்றிருக்கிறது. அதை சகல வழிகளிலும் பொறுப்பும், நடுநாயகமும் வாய்ந்த நமது தாய்ச் சங்கமாகிய நாடார் மஹாஜன சங்க நிர்வாகக் கூட்டத்தில் ஒப்புக் கொள்ளாமல் திருத்தி அச்சிடச் செய்து ஒப்புக் கொள்ளும்படியாகவும், அது வரையும் ஷை பிரதிகளில் ஒன்றையாவது வினியோகஞ் செய்யாதிருக்கும்படியாகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

எஸ். இராமசாமி நாடார்,
அருப்புக்கோட்டை.

## தூக்கிலிடப்பட்டார்.

### டில்லியில் குழப்பம்.

சுவாமி சிரத்தானந்தரைச் சுட்டுக் கொன்ற முஸ்லீம் அப்துல் ரஷீத்தை நாளது நவம்பர் மீ 14-உயில் டில்லியில் தூக்கிவிட்டார்கள். பஞ்சாப்பில் ஓரிடத்தில் தூக்கவேண்டுமென்றிருந்ததை அவ்விடத்தில் முஸ்லீம் பெருக்கக் காரணமாய் சச்சரவேற்படுமென டில்லியிலேயே தூக்கிவிட்டார்கள். ரஷீத்தின் உறவினர்கள் பிரேதத்தைத் தம் வசம் ஒப்புவிக்கவேண்டுமென்று தெரிவித்த விண்ணப்பம் முதலில் மறுக்கப்பட்டு, ஊர்வலமின்றி சிறைச் சேரிலுள்ள கல்லறையில் புதைப்பதாக உறுதிமொழி கொடுத்தபின் அவர்கள் வசம் பிரேதம் ஒப்புவிக்கப் பட்டது. ஊர்வலம் வருவதால் பெரிய அமளி யேற்படும் என்று அதிகாரிகள் அறிந்திருந்தார்கள். பிரேதம் ஒப்புக்கொள்ள சுமார் 50 ஆயிரம் முஸ்லீம்கள் சிறைச்சாலை முன்கூடி விட்டனர். கோபங்கொண்ட இவர்களின் எண்ணம் பிரேதத்தை ஜும்மா மசூதியில் விசேஷ ஆராதனையுடன் அடக்கம் செய்ய வேண்டுமென்பது. இவர்கள் கட்டுக் கடங்காமல் பிரேதத்தை உறவினர்களிடமிருந்து கைப்பற்றி வெகு ஆர்வத்துடன் ஜும்மா மசூதிக்கு ஊர்வலத்துடன் நடந்தனர். முஸ்லீம்களின் பகைமை வெக்கை தகித்தது. பெருத்த அமர்க்களம்புரிந்தனர். நகரெங்கணும் திகிலேற்பட்டது. கடைகளெல்லாம் மூடப்பெற்றன. குழப்பத்தில் சுமார் 50 பேர்கள் காயமுண்டதாகவும் ஒரு இந்து மரணமடைந்ததாகவும் தெரிகிறது. காயங்கொண்டாரில் ஒருவர் தவிர எல்லோரும் இந்துக்களே. பல கடைகள் கொள்ளை கொள்ளப்பட்டன. நாலு புறமும் அல்லோலகல்லோலப்பட்டது. அதிகாரிகள் குழப்பத்தை யடக்க சுறுசுறுப்புக்காட்டினர். குதிரை மேலும், மோட்டார் ஊர்தியிலும் போலீசார்கள் துப்பாக்கிகள் சகிதம் தெருத் தெருவாய் பந்தோபஸ்துக்குப் பறந்து சென்றனர். ஐரோப்பிய ஸோல்ஜர்களும் துப்பாக்கிகளைத் தயாரில் வைத்திருந்தார்கள். ஜும்மா மசூதியில் 7 மெஷின் பீரங்கிகள் முஸ்லீம்களை எதிர் பார்த்துக்கொண்டிருந்தன.

இந்நிலையில் பிரேதமும் ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. துணிவு கொண்ட சூப்பிரன்டென்டெண்டு மார்கன் என்பார் பிரேதத்தைக் கைப்பற்றி தமது மோட்டாரில் வைத்து சிறையை நோக்கிச்சென்றுவிட்டார். பின்னர், முன்னர் அதிகாரிகளால் குறிப்பிடப்பட்ட இடத்தில் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. 12 முஸ்லீம்கள் கைதுசெய்யப் பட்டனர். நகர்க் கலக்கம் விலகினபாடில்லை.

பிரேதம் முஸ்லீம் பக்கல் சேர்ந்தால் குழப்பம் நிகழும் என அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்தும் ஏதோ உறுதிமொழி கொடுத்தாரென்பதை உறுதிகொண்டு இத்தகைய சம்பவ நிகழ்ச்சிக்குக் காரண பூதர்களானது விசனிக்கத்தக்கதேயாம்.

(3-ம் பக்கத்தின் தொடர்பு)

கூறி நமது கொள்கையை நிலைபெறச் செய்யத் தயாராயிருக்கின்றோம்.

“தமிழ்நாடு” பத்திரிகையும் அதன் ஆசிரியரும், பிராமணீயத்தைத் தொலைத்து வருணச் சிரம தருமத்தை வேரறக்களைந்து சமதர்மத்தை வளர்க்கப் பிரயாசைப்படும் இந்நாளில் இத்தகைய ஜாதிப் பூசலைக் கிளப்பி ஒரு வகுப்பாருக்கு வேண்டுமென்றே தீமைசெய்யக் கருதும் பிற்போக்காளர்களுக்கு இடங் கிடைத்தது, நம் நாடு செய்த துர்ப்பாக்கியமேயாகும். இனியாவது இத்தகைய வித்தியாசங்கள் “தமிழ்நாட்”டில் வெளிவராதிருக்குமேல் ஒற்றுமையும் அன்பும் வளரு மென்பது எனது நம்பிக்கையாகும்.

தி. கருப்பையாபிள்ளை.

## டாக்டர்.
## பெஸண்டம்மையின்
## சென்னை விஜயம்.

டாக்டர். பெஸண்டம்மையார், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய பல நாடுகளையும் சுற்றிப்பார்த்து பிரம்மஞான சங்கத்தார்களுக்குள், லோககுரு, கிருஷ்ணமூர்த்தி அய்யர் தான் என்று தீர்மானிக்கச் செய்து சமீபத்தில் அவருடன் இந்தியாவுக்கு வந்து நமக்குப் பிரியமான வாசஸ்தலமான சென்னை அடையாறு வந்து சேர்ந்தார். அவருக்கு கோகலே மண்டபத்தில் அவரது சிஷ்யர்களாலும் காங்கிரஸ்காரர்களென்று சொல்லிக் கொள்பவர்களாலும் ஒரு வரவேற்பு செய்யப்பட்டது.

வந்திருந்த காங்கிரஸ் காரர்களில் காங்கிரஸ் மகாசபை ஜெனரல் செக்ரட்டேரி திரு. ஏ. ரெங்கசாமி அய்யங்காரவர்களும் வரப்போகிற சென்னைக் காங்கிரஸ் வரவேற்புக் கமிட்டிச் சேர்மன் திரு. வி. என். முத்துரங்க முதலியாரவர்களும், சென்னைச் சட்டசபை சுயராஜ்ஜியக் கட்சி உபதலைவர் திரு. எஸ். சத்திய மூர்த்தி அவர்களும் முக்கியஸ்தர்கள்.

டாக்டர். பெஸண்டம்மையார், இந்திய நாட்டைத் தன்னுடைய தாய் நாடு போல நேசிக்கிறாரென்பதும், நமது நாட்டுக்காக தம்மாலியன்ற வுதவியைச் செய்திருக்கிறாரென்பதும், ஹோம்ரூல் கிளர்ச்சியில் இந்தியர்களுக்குத் தலைவராயிருந்து புதிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டினாரென்பதும், அதற்காக காவலிலிருக்கும்படி நேர்ந்ததென்பதும், அப்போதும் சலியாமுயற்சியுடன் வேலை செய்து வந்தாரென்பதும் இந்தியர் யாவரும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறாரென்பதும் சகலரும் ஒப்பமுடிந்ததொன்றாம்.

அக்காலத்தில் காங்கிரஸ்காரராக விருந்தவர்கள் பெரும்பாலும் வக்கீல்களும் அவர்களைச் சார்ந்தவர்களுமாக வேயிருந்தார்கள்.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வருவதற்கு முன், இந்தியா மந்திரி யென்ற ஹோதாவில் திருவாளர். எட்வின் மாண்டேகு அவர்கள் இந்தியாவுக்கு விஜயஞ் செய்தபோது தான் திருவாளர். டாக்டர் நாயர் அவர்களும் திருவாளர். பிட்டி. தியாகராஜ செட்டியாரவர்களும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை ஸ்தாபித்து பிராமணரல்லாதார் சமூகத்துக்கு ஊழியஞ் செய்ய முன் வந்திருந்தார்கள்.

அது காலை, திரு. நாராயணய்யாவின் புத்திரர்கள் (ஒருவர் இப்போது லோககுரு கிருஷ்ண மூர்த்தி) பெஸண்டம்மையாரின் பிரம்மஞான சங்கத்தில் சேர்ந்து கர்னல் ஆல்காட் அவர்களுடன் சேர்ந்து வாழ்வது தமக்குச் சம்மதமில்லையென்றும் இரு குழந்தைகளையும் தம்மிடம் ஒப்புவித்து விட வேண்டு மென்றும் திரு. நாராயணய்யா செய்த வழக்கில் வக்கீலாயமர்ந்து கேஸ் நடத்தியவரான திருவாளர் (இப்போது ஸர்.) ஸி. பி. ராமசாமி அய்யரவர்களின் திறமையை அறிந்த பெஸண்டம்மையார் அவரையும் தமது சிஷ்யர்களிலொருவராய்ச் சேர்த்திருந்தார்.

ஹோம்ரூல் கிளர்ச்சிக்கும் பிராமணரல்லாதாரியக்கத்துக்கும் கொள்கையில் வித்தியாசங்களிருந்ததால் பெஸண்டம்மையாரின் சிஷ்யராகிய ஸி. பி. ஆர். அய்யரவர்கள் பெரு முயற்சிசெய்து, பிராமணரல்லாதார் இயக்கத்தை நசுக்குவதற்கு பிராமணரல்லாதாரைக் கொண்டே சென்னை மாகாணச் சங்கமென்று ஒன்றை உண்டாக்கி திருவாளர். டாக்டர். வரதராஜுலு நாயுடு வர்களையும், திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களையும் அதற்கு முன்னின்றுழைக்கும்படி செய்து தாமும் வெளியிருந்து தூண்டுதல் செய்துவந்தார். இது நாடறிந்த ரகசியமாகும்.

திருவாளர். அருண்டேல் அவர்களுக்கு, பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவரும் பிராமண ஜாதியில் பிறந்தவருமான திருச்செல்வி ருக்மணியம்மாளை டாக்டர். பெஸண்டம்மையார் திருமணமுடித்து வைத்தது காரணமாய் பார்ப்பனச் சகோதரர்களெல்லாம் பெருங் கூச்சலிட்டு அம்மையார் நமது தேசத்துக்குச் செய்த பேருபகாரத்தை யெல்லாம் மறந்து காங்கிரஸ் மகாசபையும் இதர பொது ஸ்தாபனங்களும் பார்ப்பனர் கைவசமே யிருந்தமையால் அம்மையாருக்கு யாதொரு மதிப்பும் வையாமல் தூற்றி ஒதுக்கி வைத்து விட்டார்கள்.

மஹாத்மா காந்தியடிகள் காங்கிரஸில் சேர்ந்து ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்தகாலத்தில் பிராமணரல்லாதார் ராஜீய ஸ்தாபனமாகிய ஜஸ்டிஸ் கட்சியைத் தொலைப்பதற்காகவே, தென்னிந்தியப் பார்ப்பனர்கள் தாங்களும் ஒத்துழையாதார் போல நடித்து ஒரு வருஷத்தில் சுயராஜ்ஜியம் பெறுவதற்காக அடிகளால் சேர்க்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் பண்டில் தங்களுக்குரிய வழக்கப்படி பெரும் பான்மை தங்களுக்கே சேரும்படி செய்து கொண்டதோடு மகாத்மா சிறை சென்றதும் திருவாளர். தேசபந்து, ஸி. ஆர். தாஸ்அவர்களுடன்சேர்ந்து சுயராஜ்ஜியக்கட்சியை அமைத்து இப்போது ரகசிய ஒத்துழைப்பு, பரஸ்பர ஒத்துழைப்பு, நேரடியான ஒத்துழைப்பு என்ற நிலைமைக்கு காங்கிரஸ் வந்து சேரும்படி செய்திருக்கிறார்கள்.

இந்நிலையில் பிராமண ரல்லாதாரியக்கத்திற்கு ஆக்கமழியாது பிரிந்து நின்று தேசத்தொண்டு செய்து வந்த திருவாளர்களான ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார், எம். எல். ஏ, அவர்கள் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், டாக்டர். வரதராஜுலு நாயுடு அவர்கள், ஈ. வி. இராமசாமி நாயக்கர் அவர்கள் முதலிய தலைவர்கள் எல்லோரும் கோயம்புத்தூர் மகாநாட்டில் ஒன்றுகூடி காங்கிரஸில் ஜஸ்டிஸ் கட்சியார் சேர்ந்து கொள்வதென்றும் தாங்களும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து கொள்வதென்றும் முடிவு செய்து, பிராமணரல்லாதாரியக்கத்தை திருவாளர். பனகால் அரசருடன் சேர்ந்திருந்து நடத்தி சுயமரியாதையையும், சுயராஜ்ஜியத்தையும் அடைய வேண்டுமென்றும் தீர்மானஞ்செய்து அதன்படி நடந்துவருகிறார்கள்.

மஹாத்மா காந்தியடிகளின் தமிழ் நாட்டுச் சுற்றுப்பிரயாண மானது பிராமணர்—பிராமணரல்லாதார் வேற்றுமையை எவ்விதமும் மாற்றமுடியாமற் போயிற்று என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. அம்மட்டோடு நின்றிருந்தாலும் தென்னிந்திய பார்ப்பனர்கள் மஹாத்மா தான் தலைவர் என்று வாயினுலாவது சொல்லிக் கொண்டிருப்பார்கள்; ஆனால் தெய்வாதீனமாய் மகாத்மாவின் பிரசங்கங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு ஒரு விழிப்பை யேற்படுத்திவிட்டிருக்கிறது.

இவைகளை யெல்லாம் யோசித்துத் தான் திருவாளர். ஸர். ஸி. பி. ராமசாமி அய்யரவர்களின் தலைமையில் டாக்டர். பெஸண்டம்மையாருக்கு நடந்த வரவேற்பில் காங்கிரஸ் ஜெனரல் செக்ரட்டேரி திரு. ஏ. ரெங்கசாமி அய்யங்காரவர்கள்,

"இந்தியாவின் விடுதலைப் போரில் திரும்பவும் கலந்துகொள்ளுமாறு ஸ்ரீமதி. பெஸண்டை அழைக்கும் முக்கியமான வேலை எனக்கு அளிக்கப் பட்டிருக்கிறது"............"இப்பொழுது பெரிய நெருக்கடி நாட்டில் ஏற்படும் போல்காணப்படுகிறது. என்ன நேருமென்று ஒருவரும்சொல்லமுடியாத ஸ்திதியில் இருக்கிறோம்"............"சுயாட்சி சங்கம் ஸ்தாபித்து தீவிரமான கிளர்ச்சி நடத்தியதுபோல் ஸ்ரீமதி. பெஸண்டு திரும்பவும் இந்தியாவின் விடுதலைக்காகப் போர் புரிவாரென்று உறுதியாக நம்புகிறேன். நாம் எல்லோரும் அவருடன் ஒத்துழைத்து காங்கிரஸின் தலைமையை அவர் ஏற்றுக்கொண்டு நடத்தினுல் தேசிய யுத்தத்தை விடாமல் பலமாக தீவிரமாய்ச் செய்யக்கூடும்"

என்று கூறியதாகத் தெரிகிறது. டாக்டர். பெஸண்டம்மையாரை அழைக்கும்படி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாவது மற்ற எந்தக் காங்கிரஸ் ஸ்தாபனமாவது உத்தரவிட்டிருப்பதாக இதுவரை பத்திரிகையில் வெளிவரக் காணோம். திரு. அய்யங்கார் நமது தேசத்துப் பெரியாரான மகாத்மா காந்தியடிகளை ராஜீய விஷயத்தில் கலந்து கொள்ளும்படி அழைப்பதை விட்டு திரு. அம்மையாரை அழைத்த காரணமென்ன? இந்த அழைப்பானது பழைய ஞாபகங்களை பிராமண ரல்லாதாருக்குள் எழுப்பிவிடுவது ஆச்சரியமல்ல.

திரு. சத்தியமூர்த்தி பேசியதைக் கவனிப்போம்.

"டாக்டர் பெஸண்டின் வேலையைக் கவனித்தல் மயிர்க் கூச்சலெடுக்கும்"......அவருடைய சுயாட்சி மசோதாவில் எல்லா அம்ஸங்களையும் நான் ஒப்புக்கொள்ளாவிடினும், காங்கிரஸ், பெர்க்கன் ஹெட்டின் அயோக்கியத்தனமான, கர்வமான பேச்சுக்கும் நடத்தைக்கும் தகுந்த பதிலளித்து, சுயராஜ்ஜியத்தை கம்பீரமாய் வற்புறுத்திக்கேட்க, அம் மசோதா வெகுவாக உபயோகமாயிருக்கும். இதற்காகவும் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்"........"ஆனால் தற்போது நாட்டிலுள்ள இந்து முஸ்லீம் பிளவுகளையும் பிராமண பிராமணரல்லாத கட்சிகளையும் உத்தேசித்து எல்லோரையும் அரவணைத்துக் கொண்டுபோக வேண்டியது அவசியமாயிருக்கிறது. சமூக ஒற்றுமையும் அரசியல் ஒற்றுமையும் ஸ்தாபிக்கவேண்டியிருக்கிறது. மாண்டேகு சீர்திருத்தம் வழங்கியபோது நாட்டில் என்ன நிலைமை இருந்ததென்பதை நாம் மறந்து விடவில்லை. அதைப்பற்றி நினைப்பூட்டினுல் இங்கு சிலருக்கு கசப்பாய்த்தானிருக்கும். நாம் மட்டும் அப்பொழுது ஒற்றுமையாயிருந்து சர்க்காரை எதிர்த்திருப்போமானுல் இரட்டையாட்சி தோன்றியே யிராது. ஆனால் அப்போது நமக்குள் பிளவுகள் இருந்ததால் பார்லி மெண்டு தனது திட்டத்தை நிறைவேற்றி தனது காரியத்தை சாதித்துக்கொண்டது"........"ஸ்ரீமதி பெஸண்டின் தலைமையில் நாம் இவ்வாறு ஐக்கியமாய் உழைக்கக் கொடுத்து வைத்திருக்கவேண்டுமென்று நான் பிரார்த்திக்கிறேன்".

திரு. சத்தியமூர்த்தியவர்கள், டாக்டர் பெஸண்டின் சுயாட்சி மசோதாவை சுமார் இரண்டு வருஷமாக ஆதரியாமல் இப்போது அதை வைத்துக் கொண்டு காங்கிரஸ் வேலைசெய்ய வேண்டுமென்று சொல்வதின் காரணமென்ன? இதற்கு முன் எப்போதாவது சொல்லியதுண்டா? திடீரென்று இந்த ஞானம் வரக்காரணமென்ன? ராயல் கமிஷனென்று நினைக்க வேண்டாம். பிராமண ரல்லாதாரியக்கம் பலப்படுவதை தடைப்படுத்தும் நோக்கமென்றே கருதுகிறோம். காற்றும் பார்ப்பனர் பக்கம் திரும்புமோ என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. இராயல் கமிஷன் பகிஷ்காரப் பேச்சும் சேலம் ஜில்லா கான்பரன்ஸில் பெஸண்டம்மையின் சுயாட்சி மசோதாவைக் கவனித்திருப்பதையும் பிராமணரல்லாதார் கவனிக்கவேண்டும். பெஸண்டம்மையார் ஒடுக்கப்பட்டவர்களிடத்தில் விரோதங்கொள்ளக் கூடியவரில்லையென்றாலும் அவருடைய நண்பர்களும் சிஷ்யர்களும் அநேகமாய் பிராமணவகுப்பாரும் இதர நடுத்தர வகுப்பினர் சிலருமென்பதையும் நாம் மறக்கமுடியாது.

காங்கிரஸைச் சேர்ந்த இரண்டு பார்ப்பனத்தலைவர்கள் மஹாத்மா காந்தியடிகளை மறந்து விட்டு டாக்டர் பெஸண்டம்மையாரைத் தலைமை வகிக்கும்படி கேட்டிருப்பதையும், அடிகளும் பார்ப்பனரல்லாதாரின் கஷ்டங்களை யுணராமல் நமது இயக்கத்தை ஆதரிக்காமல், வருணச்சிரம தருமவுபதேசஞ் செய்துவிட்டுப் போனதையும், பார்ப்பனரல்லாத தலைவர்கள் கூடி யோசனை செய்து, ராயல் கமிஷனை பஹிஷ்கரித்து விட்டு, பார்ப்பனரல்லாதார் சுயமரியாதை யியக்கத்தில் தீவிரமாய் முன்னின்றுழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் பெஸண்டம்மையின் சென்னை விஜயமானது, பிராமணரல்லாதாருக்குள் பிரிவினையையும் முயற்சிக்குறைவையும் உண்டாக்காதிருக்கும்படி அருள் செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சமதருமவாதி.

---

## நாடார் மகாஜன சங்கம்
## 11-வது மகாநாடு, கும்பகோணம்.

வரவு செலவு கணக்கு,

| விபரம். | வரவு. ரூ. | அ. | பை. | பற்று. ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| டிக்கெட்டு விற்று வரவு ... | 5040 | 0 | 0 | | | |
| நன்கொடை ... | 5 | 0 | 0 | | | |
| அச்சுக்கூலி, காகிதக் கிரயம் ... | | | | 370 | 3 | 9 |
| தபால் தந்தி ... | | | | 66 | 14 | 6 |
| போஜனச் செலவு ... | | | | 1736 | 14 | 1 |
| கொட்டகைச் செலவு ... | | | | 792 | 7 | 3 |
| சில்லரைச் செலவு இனம் ... | | | | 463 | 2 | 11 |
| தீபம், நகர்ச் செலவு ... | | | | 168 | 5 | 0 |
| பிரசாரம், பிரயாணச் செலவு ... | | | | 1043 | 2 | 3 |
| ஆபீஸ் சம்பளச் சிப்பந்திச் செலவு ... | | | | 54 | 0 | 0 |
| நாடார் மகாஜன சங்கம் காரியதரிசிகளுக்கு செலவு நீக்கி மீதம் ஏ. எம். எஸ். ஏ. வசம் அனுப்பியது ... | | | | 349 | 14 | 3 |
| ஆக வரவு பற்று... | 5045 | 0 | 0 | 5045 | 0 | 0 |

வெ. சுடலைமுத்து நாடார்,
ஜெனரல் செக்ரட்டேரி.

---

## இனம்! இனம்!!

படுக்கை யறையை அலங்கரிக்கும் பிரெஞ்சு லேடிகளின் அழகிய பெட்ரும் போட்டோ படங்கள் 50 எங்களுடைய உயர்ந்த 14 கே. டி. பௌன்டன் பேனு வாங்குவோர் ஒவ்வொருவருக்கும் இனம் கொடுக்கப்படும். உடனே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூபாய் 2—8—0. விலாசம்:—

மில்லர் வாச் கம்பெனி,
38. பரமானந்த முதலி தெரு,
ஜியார்ஜ் டவுன், மதறாஸ்.